Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளி நாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி

T.P -021-222-7310

(சி-1844)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆகிர் 05 (25.05.2004) செவ்வாய்கிழமை இதழ்:236

# கிழக்கு பிராந்திய படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட



## பாதுகாப்பு நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இராணுவத் தளபதி லயனல் பலகல்ல நடவடிக்கை

(கொழும்பு)

**மட்டககளப்பு மாவட்டத்தில் மோசமடைந்திருக்கும் பாதுகாப்பு நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக- உயர்மட்ட இராணுவ அதிகாரி ஒருவரை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல நியமித்துள்ளார்.**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், படுகொலைகளையடுத்தே - கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமையைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கு இந்த அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.**

இதற்காக, கிழக்கு மாகாணம் முழுவதற்குமான இராணுவ நடவடிக்கை கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்பட்டிருக்கிறார். இராணுவத் தலைமை அதிகாரியாக இருக்கும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவிடம் நேற்று அவசரமாக இந்தப் பொறுப்பு கையளிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மூன்று வாரங்களில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள், இராணுவப் புலனாய்வுத் துறையினர், மற்றும் கருணா குழுவைச் சேர்ந்த பலர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், கருணா குழுவைச் சேர்ந்த பலர் ஆயுதங்கள், வெடி பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.

இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து, கடந்த வியாழக்கிழமை ஆலங்கேணியில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர் கொல்லப்பட்ட தாக்குதல், இராணுவத்தினரின் பின்னணியுடனேயே

(12 ஆம் பக்கம் பார்காக)

## தமிழக மீனவர் சங்க பிரதிநிதிகள் மன்னார் மீனவர்களுடன் பேச்சு!

(மன்னார்)

இலங்கையின் வடகடல் பகுதியில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களால் வட பகுதி மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக இந்திய மீனவப் பிரதிநிதிகளுக்கும், மன்னார் மீனவர் சங்க பிரதிநிதிகளுக்குமிடையே முக்கியமான சந்திப்பொன்று நேற்று மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் வாழ்வோதய கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை 10 மணிதொடக்கம் மாலை 3 மணிவரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் வண.இராயப்பு ஜோசேப் ஆண்டகை, மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், கிஷோர், வினோதலிங்கம், மீனவர்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கடற்படை, பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்திய மீனவர் தரப்பில் தென்னிந்திய மீனவ சங்கங்களின் சமாசத்தைச் சேர்ந்த

(12 ஆம் பக்கம் பார்காக)

## இராணுவ ஆட்சேர்ப்பு முயற்சி தோல்வியிலே முடிவடைந்தது!

### கால எல்லை நீடிப்பு

(கொழும்பு)

2004 ஆம் ஆண்டுக்கான இராணுவ ஆட்சேர்ப்பின் முதற்கட்ட நடவடிக்கைகள் இடம் பெறுவதற்கான திகதி நீடிக்கப்பட்டிருப்பதாக இராணுவத் தலைமையகம் நேற்றுமாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை கடந்த 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவுபெறுவதாக இருந்தது.

18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட 8 ஆம் தரம் சித்தியடைந்தவர்கள் இராணுவத்தில் இணைந்துகொள்ளலாம் என்றும்,

இராணுவத்தில் இணைவோருக்கு உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் பயிற்சி வழங்கப்படும் என்றும், இவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்புப் படையில் சேவையாற்ற அனுப்பப்படுவர் எனவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட அளவு சிங்கள இளைஞர்கள்

## கிழக்கு பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் நேற்று மாலை சுட்டுக்கொலை!

### மட்டக்களப்பில் பெரும் பரபரப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவரும், கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கத் தலைவருமான குமாரவடிவேல் தம்பையா இனந்தெரியாத நபர்களால் நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

வெளியே அழைத்த சிலர் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தலை மற்றும் நெஞ்சுப் பகுதியில் காயங்கள் ஏற்பட்டன.

உடனடியாக இவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் - அங்கு அவர் மரணமானார்.

இராணுவத் தலைமையகம் நேற்றுமாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை கடந்த 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவுபெறுவதாக இருந்தது.

ஆனால், எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி வரை இராணுவ ஆட்சேர்ப்புக்கான திகதி நீடிப்புச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ளிலும், வெளிநாடுகளிலும் பயிற்சி வழங்கப்படும் என்றும், இவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காப்புப் படையில் சேவையாற்ற அனுப்பப்படுவர் எனவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் எதிர்பார்க்கப்பட்டளவு சிங்கள இளைஞர்கள் இணைய முன்வராததாலேயே- ஆட்சேர்ப்புக்கான கால எல்லை நீடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## பலாலி உயர்பாதுகாப்பு வலய விவகாரம்

# பாதுகாப்பு அமைச்சின் செயலரை அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு!

## உயர்நீதிமன்றம் உத்தரவு

பலாலியைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் பொதுமக்கள் குடியேறவும் விவசாய நடவடிக்கையில் ஈடுபடவும் அனுமதிப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிக்கை ஒன்றை நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டுமென உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் விவசாயிகளும் இணைந்து தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை தொடர்பான மனுவொன்றை பரிசீலனை செய்ததன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நீதியரர்களான அசோக டி சில்வா நிகால் ஜயசிங்க ஆகிய மூவர் கொண்ட உயர் நீதியரசர்களின் முன்னிலையில் இந்த மனு பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரனை எதிர்வரும் 26 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

### இரு தமிழ் இளைஞர்கள் காலியில் கடற்படையினரால் கைது

காலியிலுள்ள 'தக்ஷின' கடற்படைத் தளத்துக்கு அருகில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடியதாக - இரண்டு தமிழ் இளைஞர்களை கடற்படையினர் கைதுசெய்து விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

(12 ஆம் பக்கம் பார்காக)

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவரும், கிழக்கு மாகாண ஆசிரியர் சங்கத் தலைவருமான குமாரவடிவேல் தம்பையா இனந்தெரியாத நபர்களால் நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமாலை 4.40 மணியளவில் விரிவுரையாளர் தம்பையாவின் வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்களே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

மட்டு நகரப்பகுதியில் உள்ள ஞானசூரியம் வீதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

40 வயதான தம்பையாவை வீட்டுக்கு வெளியே அழைத்த சிலர் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தலை மற்றும் நெஞ்சுப் பகுதியில் காயங்கள் ஏற்பட்டன.

உடனடியாக இவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் - அங்கு அவர் மரணமானார்.

வவுனியா ஆசிக்குளத்தைச் சேர்ந்த தம்பையா தமிழ்த்தேசியத்துக்காக பாடுபட்டதால் கருணா குழுவினரின் அச்சுறுத்தலுக்குள்ளானார்.

இதனால், மட்டக்களப்பை விட்டு வெளியேறிச் சென்றிருந்த இவர் மட்டக்களப்பை புலிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த

(12 ஆம் பக்கம் பார்காக)

# நோர்வே தூதுவர் சொல்ஹெய்ம் நேற்று இரவு கொழும்பு வந்தார்!

(கொழும்பு)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று இரவு கொழும்பு வந்தார்.

நேற்றிரவு 8.30 மணிக்கு கொங்கொங் நாட்டிலிருந்து கத்தேபசுவிக் விமானத்தில் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்த இவரை நோர்வே தூதரக அதிகாரிகள், இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் வரவேற்றனர்.

ஐந்து நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகள், ஜனாதிபதி ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று ஜனாதிபதியை சந்தித்து பேச்சுக்களை நடத்தும் எரிக் சொல்ஹெய்ம் நாளை விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுநடத்துவார்.

இந்த சந்திப்பின் போது பேசப்படும் விடயங்கள் குறித்து கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதிக்கு விளக்குவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(01)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...
(சி/2489)

# புலிகள் மீதான இந்தியாவின் தடைக்கு யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்ப்பு!

## மீள் பரிசீலனை செய்யக்கோரி பொது அமைப்புக்கள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடித்திருப்பது, யாழ். குடாநாட்டு மக்களிடையே எதிர்ப்பு அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அரசின் இந்த முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என குடாநாட்டு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன். இந்திய அரசின் இந்த முடிவினையும் கண்டித்துள்ளது.**

**இவ்வாறு இந்திய அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து குடாநாட்டு மக்கள் வெளியிட்ட அறிக்கைகள் சில வருமாறு.**

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடித்திருப்பதை இந்திய அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஈழத்தமிழ் மக்களின் சுதந்திர விடுதலையினை தமது இலட்சியமாகக் கொண்டு பல்வேறு உயிர்த் தியாகங்களின் மத்தியில், கடந்த இரண்டு தசாப்தங்களாகப் போராடி வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினைத் தமிழ் மக்களிலிருந்து பிரித்து அவர்களைத் தனிமைப்படுத்தி இல்லாதொழிக்கும் பல்வேறு முயற்சிகளில் இலங்கை அரசு முனைந்து செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடும் ஒரு விடுதலை அமைப்பினை பயங்கரவாதிகள் என முத்திரையிட்டுத் தடை செய்து ஏனைய நாடுகளையும் தமது பொய்ப்பிரசாரத்தின் மூலம் விடுதலைப் புலிகள் அமைப்பினை தடை செய்யுமாறு கோரிவந்தது. இதன் அடிப்படையில் எமது அயல் நாடான இந்தியாவும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை தடை செய்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டின் சமாதானச் சூழலில் எமது விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தத்தினை புரிந்துகொண்ட பல்வேறு உலக நாடுகள் விடுதலைப் புலிகள் மீதான பார்வையினை மாற்றி வருகின்றன. குறிப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பினை உத்தியோக பூர்வமாக தமது நாடுகளுக்கு அழைத்தும், சமாதான நடவடிக்கைகளில் தமிழர் தரப்பு நியாயங்களுக்காசுச் குரல கொடுத்தும் வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில்தான் இந்தியாவும் எமது விடுதலைப் போராட்டம் தொடர்பான யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையினை நீக்கி எமது சுதந்திரமான இருப்புக்கு வழி சமைக்குமென ஈழத்தமிழ் மக்களாகிய நாம் மிகுந்த நம்பிக்கையோடு இருந்தோம். இலங்கை தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின வெற்றியின் பின்னால் உள்ள ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்ற நிலைப்பாடும் தமிழகத்தினைப் பொறுத்தவரையில் ஈழத்தமிழர் ஆதரவுக் கூட்டணியின் வெற்றியும் மேலும் வலுவூட்டின. தமிழீழ மக்களும் ஒரே சாரப்பட கருத் தொற்றுமையினை கொண்டுள்ளார்கள் என்பதை நடந்து முடிந்த இலங்கை, இந்திய தேர்தல் முடிவுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்த சூழ்நிலையில் இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பை மேலும் 2 ஆண்டுகள் தடை நீடித்தமை மிகுந்த வேதனையை ஊட்டுவதோடு அதிருப்தியையும் உண்டு பண்ணுகிறது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே, இந்தியாவில் புதிதாக பதவியேற்றுள்ள அரசு ஈழத்தமிழர்களினதும், தமிழகத்து மக்களினதும் உணர்வுகளுக்கு மதிப்பளித்து உண்மை நிலையை புரிந்து கொண்டு நசுக்கப்படும் ஒரு இனத்திற்காக போராடும் ஒரு அமைப்பு மீதான தடையினை நீடித்திருப்பது குறித்து மீள் பரிசீலனை செய்வதோடு ஈழத் தமிழர்களின் சுதந்திரமான, சுபீட்சமான வாழ்வுக்கும் தமது ஆதரவினை வழங்குமாறு வேண்டுகிறோம்.

### தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம்

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதல் தமிழ் இனத்தை அழித்து இதனை ஒரு பௌத்த சிங்கள நாடாக உருவாக்கும் முயற்சியில் சிங்களப் பேரினவாதி கள் முயற்சிசெய்து வந்தபோது - திட்டமிட்டு தமிழினம் அழிக்கப்படு வதை பொறுக்க முடியாத தமிழ்த் தலைவர்கள் அதனை எதிர்த்து அகிம்சை வழியில் போராட்டங்களை முன்னெடுத்து எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையும் பேரினவாதிகள் தமது அடாவடித்தனத்தால் முறியடித்து தமிழின அழிப்பைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தபோது - தமிழ் இளைஞர்கள் பொறுக்க முடியாது ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

இந்த இளைஞர்களின் ஆயுதப் போராடத்தையும் முறியடிக்கலாம் என பகல் கனவு கண்ட பேரினவாதிகள் காலப்போக்கில் தம்மால் தனித்துப் புலிகளை அழிக்கமுடியாது என்பதை உணர்ந்துகொண்டனர்.

இதனால், உலக நாடுகளின் உதவியுடன்தான் எமது விடுதலைப் போராட்டத்தை அழித்து அதன் மூலம் தமிழினத்தை அழிக்கலாம் எனக் கருதிய இலங்கை அரசு இதற்குரிய தந்திரோபாயமாக புலிகளைப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தினர். புலிகளைத் தமிழ் மக்கள் ஏற்கவில்லை. புலிகள் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என உலகநாடுகளுக்கு இலங்கை அரசு பொய்ப்பிரசாரம் செய்து புலிகளைத் தடை செய்து பயங்கரவாத ஒழிப்புக்கு உதவும்படி உலகநாடுகளைக் கேட்டுக்கொண்டது.

இந்தக் கருத்துக்களை நியாயப்படுத்தி தமிழ்மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத இலங்கை அரசுக்கு விலைபோன சலுகைகளுக்கு அடிமையான தமிழ் மக்களால் மன்னிக்க முடியாத இலங்கை அரசின் அடிமைகளாக இருந்த தமிழினத்தின் துரோகிகள் சிலரையும் பயன்படுத்தியது.

இதனால், புலிகளைச் சில நாடுகள் தடை செய்தது. இதில் இந்தியாவும் ஒன்று என்பது வேதனைக்குரியது. இது இவ்வாறு இருக்க இருபது ஆண்டுகளாக தமிழ்மக்களின் விடுதலையை அடிப்படை நோக்காகக் கொண்ட விடுதலைப் புலிகளின் மீது இத்தகைய தப்பபிப்பிராயங்களை இலங்கை அரசு உலக நாடுகள் மத்தியில் ஏற்படுத்தி வருவதை தமிழ்மக்களும் அறிந்துகொண்டனர்.

இதனால், இவற்றை முறியடித்து விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதையும், பயங்கரவாதிகள் அல்லர் என்பதையும், அது ஒரு விடுதலை அமைப்பு என்பதையும் சர்வதேசத்துக்கு உணர்த்த வேண்டுமெனச் சிந்தித்து பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மூலம் தமிழ்ச் சமூகம் ஒட்டுமொத்தமாக எமது விடுதலை நாயகர்களான விடுதலைப் புலிகளின் பின்னால் அணிதிரண்டு உள்ளதென்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்தோடு, விடுதலைப் புலிகளும் கடந்த இரண்டு ஆண்டுகளாக இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின் போது இலங்கை அரசு பல போராளிகளைக் கொலை செய்த போதும், அத்துமீறி பல கப்பல்களைத் தாக்கியபோதும், பொறுமை காத்து விடுதலையே ஒரே நோக்கமென்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனை இன்று சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. மக்கள் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக நிற்கிறார்கள் என்பதைப் புரிந்துள்ளது. இதனால்தான் பல நாடுகளும் புலிகளை உத்தியோக பூர்வமாக அழைத்து அவர்களது கருத்துக்களை அங்குள்ள மக்களுக்குச் சென்றடையக் கூடிய வகையில் புலிகளை வரவேற்றுள்ளனர்.

இந்தநேரத்தில், இந்தியாவில் புதிய ஆட்சிபீடம் ஏறிய அரசு விடுதலைப் புலிகளை மீண்டும் தடை செய்திருப்பது, இலங்கை அரசின் பொய்ப்பிரசாரம் உலகின் பல்வேறு நாடுகளிலும் அம்பலமாகியும், இந்திய தேசம் இதனை உணரவில்லையா? அல்லது இலங்கை அரசுடன் சேர்ந்து ஈழத்தமிழரை அழிப்பதற்கு துணை போகிறதா? என எண்ணத் தோன்றுகிறது. இந்தியாவின் இந்தச் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அத்தோடு, இந்தியாவின் இத்தடையுத்தரவு தொடர்பாக மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழர் ஆசிரியர் சங்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அண்மைக்காலத்தில் தமிழகத்தில் ஊடுருவியுள்ளனர். அவர்கள் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்று மிகவும் தவறான எண்ணத்தில் இந்தியாவில் புதிதாக அதிகாரத்திற்கு வந்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பென அறிவித்திருப்பது தமிழீழ மக்களுக்கு புதிய அரசு செய்திருக்கும் மிகவும் துரோகத்தனமான செயலாகும்.

அண்மையில் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தல்மூலம், தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என தமிழ் மக்கள் ஐயம்திரிபுர நிரூபித்துள்ளனர். வடக்கு - கிழக்குப் பகுதியின் இடைக்கால நிர்வாகத்தை ஏற்று வட - கிழக்கின் அபிவிருத்தியில் பாரிய பங்குகொள்ள விடுதலைப் புலிகள் முன்வந்திருக்கும் இவ்வேளையில் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் வல்லாதிக்கம் கொண்ட இந்திய நாடு இத்தகையதொரு தீர்மானம் எடுத்திருப்பது தமிழ்மக்களுக்கு கொடுத்த பாரிய நெருக்கடியாகும். இந்தியாவில் கடந்த பன்னிரண்டு வருடமாக தடைவிதித் திருந்தபோதிலும், வரன்முறை தவறாத தலைமையினாலும் கட்டுக் கோப்பான நடவடிக்கைகளாலும் உலகத்தின் பல நாடுகளின் பாராட்டைப்பெற்ற விடுதலைப் புலிகளை புதிய அரசு ஒதுக்கிவைப்பது ஈழத் தமிழ் மக்களினால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஈழத்தமிழ் மக்களின் அபிலாஷைகளை புதிய இந்திய அரசு புரிந்துகொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை இந்தியாவில் முழுமையாக நீக்கி, அதனையொரு தமிழ்மக்களின் விடுதலை அமைப்பு என அறிவிக்கவேண்டும் என சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மகளிருக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமாதான நடவடிக்கையிலும், பொதுவாழ்விலும் பெண்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று நாளை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இலங்கை சமாதானப் பேரவையின் திட்டப் பணிப்பாளர் பாலகிருஷ்ணன் கலந்து கருத்துரை வழங்குவார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, யாழ்.மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து இரு பெண் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (லெ)


**காலசுரபி இதழ் - IV**
**வெளியீட்டு விழா**

இடம் : புவியியற்துறை மண்டபம்
யாழ். பல்கலைக்கழகம்.
காலம் : 26.05.2004
புதன்கிழமை.
நேரம் : பி.ப 2.00 மணி (இ.நே)
தலைமை : மா. பத்மராஜ்
(தலைவர், வரலாற்றுக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
வரலாற்றுக்கழகத்தினர்
யாழ்.பல்கலைக்கழகம்

**நிகழ்ச்சி நிரல்**

01. மங்கள விளக்கேற்றல்
02. தமிழ்த்தாய் வாழ்த்து
03. அக வணக்கம்
04. வரவேற்புரை ஜெ.பவித்திரா (வரலாற்றுக்கழகம்)
05. தொடக்கவுரை:
✤ பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் (உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி)
06. தலைமையுரை
07. ஆசியுரை
✤ பேராசிரியர் சு. மோகனதாஸ் (துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)
✤ பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் (கலைப்பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)
08. நூல் அறிமுக உரை
✤ பேராசிரியர் ச. சத்தியசீலன் (வரலாற்றுத்துறைத் தலைவர்)
09. நூல் வெளியீடு:
முதற்பிரதி பெறுபவர் - S. சிவமகாராஜா (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். நிர்வாக இயக்குநர் நமது ஈழநாடு பத்திரிகை)
10. சிறப்புப்பிரதி வழங்கல்:
11. மதிப்பீட்டுரை
✤ பேராசிரியர் வி. சிவசாமி
12. இதழாசிரியர் உரை
-செல்வி மு.சிவப்பிரியா
13. நன்றியுரை
-சு. தயாபரி (செயலாளர் வரலாற்றுக்கழகம்) (சி/2579)



**சிறு விளம்பரம்**

**நாவல்கள்**

செங்கை ஆழியானின் புதிய நாவல்கள் - போரே நீ போ, வானும் கனல் சொரியும், சாம்பவி, ஈழராஜா எல்லாளன், கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் மற்றும்.. கிடுகு வேலி, யானை, குவேனி, காவோலை, ஆச்சி பயணம் போகிறாள்.. பிரபல புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. கமலம் பதிப்பகம், 75/10A, பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (சி-2582)

**வரலாற்று ஆவணங்கள்**

கலாநிதி க.குணராசா-- ஈழத்தவர் வரலாறு, The Jaffna Dynasty, மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம், முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம், மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவ மாலை, 24 மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு - பிரபல புத்தக சாலைகளில் விற்பனையாகின்றன. கமலம் பதிப்பகம் 75/10A, பிறவுண் வீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (சி-2583)

**சிங்களம்/ஆங்கிலம்**

இப்பொழுது நீங்களும் இணைந்து கற்கலாம். நேரடி வகுப்புக்களும், தபால்மூல வகுப்புக்களும் நடைபெறும். க.பொ.த. இரண்டாவது மொழி, சிங்களம் ஆரம்பம்-ஜூன் முதல்வாரம். விபரங்களுக்கு எழுதவும் அல்லது நேரில் வரவும்

வழிகாட்டல் ஆசிரியர்
திரு மல்வான
56, அம்மன் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி/2581)



நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரபு, குஷ்பு, நெப்போலியன் நடித்த
மறவன்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
SLIVER
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த
ஆய்த எழுத்து

காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்
5 ஆவது வெற்றிவாரத்தை நோக்கி
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த
அருள்

(சி-2397) (றீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி
26.05.2004 முதல் எதிரி

# விமானப்படையினருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன?

## உயர்மட்ட விசாரணைகள் தொடர்கின்றன

(கொழும்பு)

**பலாலி விமானப் படைத்தளத்தில் கடந்த 16 ஆம் திகதி இரவு உணவை உட்கொண்ட விமானப்படையினரில் 131 பேர் திடீர் சுகவீனமுற்றது தொடர்பாக விசாரணைகளை விமானப்படையினர் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

**இது தொடர்பாக விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா தெரிவிக்கையில், இந்தச் சம்பவம் தொடர்பாக பூரண விசாரணையை நடத்துமாறு விமானப்படையினருக்கு தான் உத்தரவிட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்காமல் இருப்பது குறித்து பரிந்துரை செய்யுமாறு விசாரணையாளர்களுக்கு தாம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.**

வடக்கிலுள்ள விமானப்படை, பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கென நாளாந்தம் 16 தொன் இறைச்சி மற்றும் மரக்கறி வகைகள் - இரத்மலான விமான நிலையத்திலிருந்து பலாலிக்கு விமானம் மூலம் அனுப்பப்படுகிறது.

கடற்படையினருக்கான உணவு விமானமூலம் அனுப்பப்படுவதில்லை. அவர்களுக்கான பங்கீட்டு உணவை கப்பல் மூலமாகப் பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 16 ஆம் திகதி மதிய உணவின் பின்னான எட்டு மணித்தியாலத்திற்குப் பின் விமானப்படையினருக்கு வழங்கப்பட்ட உணவிலேயே சந்தேகம் ஏற்பட வாய்ப்பிருப்பதாக பலாலி விமானப் படைத தள அதிகாரி விங் கொமாண்டர் அஜந்த சில்வா தெரிவித்தார்.

இந்த இரவு உணவை உட்கொண்ட பின்னர் விமானப்படையினருக்கு கடுமையான வாந்தி, வயிற்றோட்டம் மற்றும் வயிற்றுவலி ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு உணவை உட்கொண்ட விமானப்படையினர் நோய்வாய்ப்பட்ட உடனேயே அவர்கள் பலாலியிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால், படையினர் நோய்வாய்ப்பட்டதற்கு உண்மையான காரணம் ஒருவருக்கும் உடனடியாகத் தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நோய்வாய்ப்பட்ட விமானப்படையினர் உட்கொண்ட இரவு உணவின் மாதிரி கொழும்பிலுள்ள மருத்துவ ஆய்வு நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதன்மூலம் உணவில் என்ன தவறு நடந்தது என்பதை அடையாளம் காணமுடியுமெனவும் விமானப் படைத்தளபதி டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

குளிர்சாதனப் பெட்டியிலுள்ள இறைச்சி வகைகளே விமானத்தில் ஏற்றப்படுவதாகவும், விமானத்தில் குளிர்சாதன வசதிகள் இல்லாத காரணத்தால் அவை றெஜிபோம் பெட்டிகளில் அடைக்கப்பட்டு நல்ல நிலையில் அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விமானத்தில் அனுப்பப்படும் இந்த புதிய உணவுகள் பலாலி விமானத் தளத்தில் இறக்கப்பட்டு நேரடியாகவே சமையல் கூடத்திற்கு கொண்டுசென்று சமைக்கப்படுவதாக இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார். அத்துடன், இதில் சில தாமதங்கள் நடைபெறவும் சாத்தியங்கள் உள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்புக்குத் தகவல் அனுப்பப்பட்ட உடனேயே மருத்துவ அதிகாரிகள் குழுவொன்று பலாலிக்கு அனுப்பப்பட்டதென விமானப் படைத்தளபதி டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட விமானப்படையினர் நேரத்திற்கு நேரம் வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும், ஏனைய அனைவரும் கடந்த செவ்வாய்க்கிழமையே விடுவிக்கப்பட்டதுடன், கடந்த வெள்ளிக்கிழமை அனைவரும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிகளவான விமானப்படையினர் பாதிக்கப்பட்டது இதுவே முதல்முறையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தின் போது பாவிக்கப்பட்ட சமையல் உபகரணங்கள், குடிதண்ணீர்க் குவளைகள், சாப்பாட்டுக் கோப்பைகள் மற்றும் குடிதண்ணீர் போன்றவற்றை சுத்தப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளதாகவும் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

நாங்கள் இது தொடர்பாக எவற்றையும் விட்டுவிடப் போவதில்லை. இந்தச் சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்பது தொடர்பாக நாங்கள் ஒவ்வொன்றையும் பரிசோதனை செய்யவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஜனாதிபதி சட்டத்தரணிகளாக எட்டுப்பேர் நியமனம்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி சட்டத்தரணிகளாக எண்மரை நியமித்துள்ளார்.

டொக்டர் ஜெயந்த டீ அல்மேடா, ஜி.நிஹால் பெர்னாண்டோ, நிஹால் ஹற்றிச், பி.மோகன் பீரிஸ், ஹர்சனா எ.ஜே.சோஷா, ஏ.ஆர். சுரேந்திரன், எஸ்.சி.பி வல்கம்பயா மற்றும் ரி.வலலியத்த ஆகியோரே ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டவர்களாவர்.

### வரி மன்னிப்பு சட்டமூலத்தை ரத்துச் செய்யத் தீர்மானம்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட சர்ச்சைக்குரிய வரி மன்னிப்பு சட்டமூலத்தை தற்போதைய அரசாங்கம் ரத்துச்செய்யத் தீர்மானித்துள்ளது.

வரி மன்னிப்புச் சட்டத்தின் மூலம், அரசாங்கத்துக்கு நிலுவையாக வந்துசேர வேண்டிய சுமார் 6800 கோடி ரூபா நிதி வரி செலுத்துவோரிடம் இருந்து கிடைக்கும் என ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் கூறியது. ஆனால், அந்த வரி மன்னிப்புச் சட்டத்தின் கீழ் - ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான வரி செலுத்துவோர் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் வரி செலுத்தாத குற்றச்சாட்டுக்கு உள்ளான பலர் சட்டத்தில் இருந்து தப்பிக்கொள்ள வாய்ப்பிருப்பதாகவும் தற்போதைய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# மாகாணசபைத் தேர்தலிலும் சுதந்திரக்கட்சி–ஜே.வி.பி கூட்டு!

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

முன்பு தாம் கேட்கும் வேட்பாளர் பட்டியலைத் தரமுடியாது போனால், தனித்துப் போட்டியிடப் போவதாக ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் தெரிவித்திருந்தது. இதனை எச்சரிக்கையாக எடுத்துக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியின் கோரிக்கைக்கு இணங்கியுள்ளது.

இதன் அடிப்படையில், எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள 6 மாகாண சபைகளின் தேர்தல்களுக்காக மொத்தமாக 73 ஜே.வி.பி வேட்பாளர்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. (01)



திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விடுதலைநூல் வெளியீட்டு விழாவில் - கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உரை நிகழ்த்துவதை முதற் படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சசிகுமார்)

# மக்களுடன் தொடர்புடைய திணைக்களங்களை கணினி மயப்படுத்த சீன அரசு முன்வந்துள்ளது

இலங்கையில் பொதுமக்களுடன் தொடர்புடைய அரச திணைக்களங்களை முழுவதுமாக கணினி மயப்படுத்துவதற்கு சீன அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கைக்கான சீனத்தூதுவர் சன்குயோசியாங் கடந்த வியாழக்கிழமை பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொடவிடம் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சீனா வருடாந்தம் 800 மில்லியனை கடனாக வழங்கிவருகின்றது. இதில் சில முக்கியமான அபிவிருத்திப் பணிகள் சீன அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு தொடர்ச்சியாக இலங்கையிலுள்ள நிர்வாகப் பிரிவுகளின் வேலைகளை இலகுவாக்குவதற்காக, அவற்றை முழுவதுமாக கணினி மயப்படுத்தவுள்ளோம் என சீனத் தூதுவர் தெரிவித்தார்.

அத்துடன், நவீன பண்பாட்டுடன் கூடிய மண்டபம் ஒன்று - கொழும்பிலுள்ள பௌத்தலோக மாவத்தையில் சீன அரசினால் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் கலைஞர்கள் மிகவும் நன்மையடைவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - பதிவாளர் திணைக்களம், காணிப்பதிவுத் திணைக்களம், ஓய்வூதியத் திணைக்களம் ஆகிய மூன்றும் மக்கள் பெருமளவில் பயன்படுத்தும் திணைக்களங்களாகும். எனவே, கணினி அறிமுகத்தை மேற்கொள்ளும் போது, இவை மூன்றுக்குமே அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் அவற்றின் வேலைகளை இலகுவாக்க முடியுமென்று அமைச்சர் தொடங்கொட கூறியுள்ளார்.

தற்போது இந்த மூன்று திணைக்களங்களுக்கும் செல்லும் மக்கள், தேவையற்ற வித்தில் தமது நேரத்தை செலவிடுகின்றனர். இந்த அலுவலகங்களுக்கு மக்கள் பிறப்புச் சான்றிதழ், காணி உறுதி மற்றும் காணிப்பதிவு தொடர்பான அத்தியாவசிய சேவைகளுக்கு செல்கின்றனர்.

எனவே, இந்த மூன்று திணைக்களங்களுக்கும் கணினி வசதியை செய்வதன் மூலம் மக்களின் வீணான நேரத்தைத் தவிர்த்து நல்லதொரு நிர்வாகத்திறனை ஏற்படுத்தலாமென அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஆயுதங்களைப் புலிகள் கைவிடுமாறு அமெரிக்கா கூறியதை ஏற்கமுடியாது!

## சிங்கள ஊடகவியலாளர் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அமைப்பதற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென அமெரிக்கா கூறியிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதென பிரபல சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'சமாதானமும், ஊடகங்களும்' எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, 'ஹராயா' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவரான ரனத் குமாரசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் சமாதானப் பேச்சு வார்த்தைகளின் ஊடாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், தாயகத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடியவகையில் அரசியல் தீர்வொன்று காணப்படும் போது இயல்பாகவே விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவார்கள்.

அத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினையை தென்னிலங்கை ஊடகங்கள் சரியான கண்ணோட்டத்துடன் அணுகாமை குறித்தும், அவ்வூடகங்களின் ஒருபக்கச் சார்புத் தன்மை குறித்தும் ரனத் குமாரசிங்க தனது உரையில் கவலை தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அமைப்பதற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டுமென அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா றொக்கா அண்மையில் கொழும்பில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாறுபட்ட இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் பொலிஸாரால் தடுத்துவைப்பு

(மன்னார்)

வாகனங்களின் ஆவணங்களில் காணப்பட்ட இயந்திர மற்றும் அடிச்சட்ட இலக்கங்களுக்கும் - வாகனங்களில் காணப்பட்ட இயந்திர, மற்றும் அடிச்சட்ட இலக்கங்களுக்குமிடையே வேறுபாடு இருந்ததனால் இரண்டு வாகனங்களை படையினர் தடுத்துவைத்திருப்பதாகப் படைத்தரப்பு தெரிவித்தது.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களில் மடு வீதியில் உள்ள படையினரின் சோதனை நிலையத்தில் நடைபெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக படைத்தரப்பு தெரிவித்துள்ளதாவது -

கடந்த வெள்ளி, சனி ஆகிய இரண்டு தினங்களிலும் மடுத் தேவாலயத்திற்கு செல்வதற்காக வந்த இரண்டு வாகனங்களின் ஆவணங்களையும் வாகனத்தையும் படையினர் சோதனையிட்ட போது இரண்டு வாகனங்களின் ஆவணங்களிலுள்ள இலக்கங்களும், வாகனங்களின் இலக்கங்களும் வேறுபாடாக இருந்தன.

எனவே, இவ்விரண்டு வாகனங்களுடன் வந்த பயணிகளும் வாகனங்களும் சோதனைச் சாவடியில் நின்ற பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதன்படி கடந்த வெள்ளிக்கிழமை 250 - 5706 இலக்கமுடைய வெள்ளை நிற டொல்பினும், சனியன்று 40 - 5196 இலக்கமுடைய வெள்ளை டெலிக்காவும் படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடர்பாக முருங்கன் பொலிஸார் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விளையாட்டு

## சர்வதேச கிரிக்கெட் அணிகள் அனைத்தும்

# சிம்பாப்வேயை புறக்கணிக்க கோருகின்றார் ஹீத் ஸ்ரீக்!

சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் நிலவும் பிரச்சினை முடிவுக்கு வரும்வரை, கிரிக்கெட் நாடுகள் அனைத்தும் சிம்பாப்வே அணியை விட்டு விலகியிருக்க வேண்டுமென அந்த அணியின் முன்னாள் கப்டன் ஹீத்ஸ்ரீக் கேட்டுள்ளார்.

சிம்பாப்வே கிரிக்கெட் அணித் தேர்வில் ஏற்பட்ட பிரச்சினையால் ஹீத் ஸ்ரீக் விலக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த அணியின் 14 பேர் அணியைப் புறக்கணித்தனர். இதன் காரணமாக இந்த 15 பேரும் அணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இதன்காரணமாக இரண்டாம் நிலை அணி வீரர்களுடன் விளையாடிய சிம்பாப்வே அணி, சமீபத்தில் நடைபெற்ற இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற நிலையிலும், ஒருநாள் போட்டித் தொடரை 5 - 0 என்ற நிலையிலும் இழந்தது.

இதன்காரணமாக அவுஸ்ரேலிய அணிக்கெதிராக நடைபெறவிருந்த 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரும் ரத்துச்செய்யப்பட்டது.

இந்தநிலையில் இங்கிலாந்து அணி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில், சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஹீத் ஸ்ரீக் - பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் -



சிம்பாப்வேக்கு இங்கிலாந்து அணி சுற்றுப்பயணம் மேற்கொண்டால் சிம்பாப்வேயில் நிலவும் சூழ்நிலையை இங்கிலாந்து ஏற்றுக் கொண்டதாக அர்த்தமாகிவிடும்.

தற்போது சிம்பாப்வேயில் நிலவும் சூழ்நிலை நீடிக்கும்வரை அவுஸ்ரேலியாவாக இருந்தாலும் சரி, இங்கிலாந்தாக இருந்தாலும் சரி, பங்களாதேஷாக இருந்தாலும் சரி எந்த நாடும் சிம்பாப்வே வருமென நான் நினைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து ஹீத் ஸ்ரீக் கூறுகையில் -

பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடரின்போதுதான் இந்தப் பிரச்சினை ஆரம்பமாகியது. சிம்பாப்வே அணியை மறுதேர்வு செய்யவேண்டுமென தேர்வுச்சபை உத்தரவிட்டது.

இனவெறியின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதாவது அணியில் கறுப்பின வீரர்கள் அதிகளவில் இடம்பெறவேண்டும் என்பதற்காக இடப்பட்ட உத்தரவு இதுவாகும்.

இதைவிட வருத்தமளிக்கும் விடயம் ஒன்றும் நடந்தது.

அதாவது கறுப்பின வீரர் ஒருவருக்காக வெள்ளையின வீரர் ஒருவர் அணியைவிட்டு வெளியேறி உதவினால், அவருக்கு போட்டிகளின்போது வழங்கப்படும் சம்பளத்தை இரட்டிப்பாக வழங்க சிம்பாப்வே கிரிக்கெட் இயக்குநர் ஒருவர் முன்வந்தார். இதற்கு நானும் பயிற்சியாளர் ஜெப்மார்ஷும் சம்மதிக்கவில்லை எனத் தெரிவித்த ஹீத் ஸ்ரீக் -

இனவெறியின் அடிப்படையில் அணியைத் தேர்வு செய்யும் கொள்கையால் - நிர்வாகத்தால், சிம்பாப்வேயில் இருக்கும் இளம் கிரிக்கெட் வீரர்களின் சர்வதேச கிரிக்கெட் வாழ்வு பெரிதாகப் பாதிக்கப்படும் என்று தெரிவித்தார்.

# ஜொலி ஸ்ரார் இறுதிப்போட்டிக்கு கொக்குவில் சி.சி.சி. அணி தகுதி!

யாழ்.ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தால் அழைக்கப்பட்ட 10 விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தப்படும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இந்தப் போட்டியின் ஸ்கோர் விபரம் வருமாறு -

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 194 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுதர்சன் 24 ஓட்டங்களையும், லொயிட் 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். கொக்குவில் மத்திய சனசமூக அணியின் சார்பில் பிரதீபன் 3 விக்கெட்டுக்களையும், சுஜி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 28 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது. இதில் சபானந்தன் 59 ஓட்டங்களையும், பிரதீபன் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.(58)

# எல்லே போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் நடத்தப்படும் கலைவார நிகழ்வின் ஒரு அங்கமாக எல்லே போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் - காலை 6.30 மணிக்கு 3 ஆம் வருடமும், முதலாம் வருடமும், காலை 7.30 மணிக்கு 4 ஆம் வருடமும் 2 ஆம் வருடமும் விளையாடவுள்ளன.

# மாவட்ட மேசைப்பந்தாட்ட போட்டிகள் வேம்படி, மத்திய கல்லூரிகள் வெற்றி!

மாவட்ட மட்டத்திலான மேசைப் பந்தாட்டப் போட்டிகள் நேற்றுமுன்தினம் காலை யாழ்.மத்திய கல்லூரி உள்ளரங்கில் இடம்பெற்றது. இதில் திருக்குடும்ப கன்னியர் மடத்தை வென்றதன் மூலம் தொடர்ச்சியாக 3 தடவைகள் மாவட்ட சாம்பியனாகி ஹட்ரிக் சாதனையை வேம்படி மகளிர் கல்லூரி அணி நிலை நாட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை வலய விளையாட்டு அதிகாரி அருணகிரி ராஜாவின் மேற்பார்வையில் காலை 9 மணக்கு பெண்களுக்கான போட்டி ஆரம்பமானது.

திருக்குடும்ப கன்னியர்மடம் - அரையிறுதியில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியையும், வேம்படி மகளிர் கல்லூரி அரையிறுதியில் - யுனியன் கல்லூரியின் மகளிர் அணியையும் வென்று இறுதியாட்டத்தில் மோதின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப்போட்டியில் கஜனியின் சிறப்பாட்டம் காரணமாக 3:1 என்ற அடிப்படையில் வேம்படி மகளிர் கல்லூரி சாம்பியனாது.

ஆண்களுக்கான போட்டிகள் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகின. இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் இறுதிப் போட்டியில் மோதின. பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட இந்த இறுதிப் போட்டியில், 3-0 என்ற அடிப்படையில் மத்திய கல்லூரி சாம்பியனானது.

வெற்றிபெற்ற இந்த இரு அணிகளும் வரும் ஜூலை மாதம் வவுனியாவில் இடம்பெறும் மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கும்ளே, ஹர்பஜன் ஆகிய இருவருக்கும்

# கீப்பராகச் செயற்படுவது மிகவும் கடினமானதாம்!

## பார்த்தீவ் பட்டேல் கூறுகிறார்



இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர்களான அனில் கும்ளே, ஹர்பஜன் சிங் இருவரது பந்து வீச்சிற்கும் விக்கெட் கீப்பராகச் செயற்படுவது கடினமென இளம் விக்கெட் கீப்பர் பார்த்தீவ் பட்டேல் தெரிவித்தார்.

இதுகுறித்து ஹூதியாவில் பேட்டி அளித்த பார்த்தீவ் பட்டேல கூறுகையில் -

"ஹர்பஜன், அனில் கும்ளே இருவரும் பல்வேறு விதங்களில் வித்தியாசமான பந்துகளை வீசக் கூடியவர்கள். எனவே இந்த இருவருக்கும் விக்கெட் கீப்பராகச் செயற்படுவது மிகவும் கஷ்டமானதாகும்.

விக்கெட் கீப்பிங்கை பொறுத்த மட்டில் அவுஸ்ரேலிய அணியின் விக்கெட் கீப்பரான அடம் கில்கிறிஸ்ட்டை நான் முன்மாதிரியாக எடுத்துக் கொண்டுள்ளேன். தற்போது நான் துடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றேன். இதன்மூலம் ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பெற வேண்டும் என்ற முனைப்புடன் இருக்கின்றேன்.

விக்கெட் கீப்பர் ஒருவர் ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார் என்றால் அது அணிக்கு பிளஸ் பொயின்ட் ஆகும். நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரின்போது நான் நிறைய அனுபவங்களை கற்றுக்கொண்டுள்ளேன்.

முகமது சமி, அக்தர், இருவரது பந்து வீச்சையும் எதிர்கொண்டதன் மூலம் நான் நிறைய அனுபவம் பெற்றுள்ளேன்.

வரும் ஜூலை மாதம் இலங்கை யில் நடைபெற வருக்கும் ஆசியக் கோப்பை போட்டிக்கான நான் தயாராகி வருகின்றேன் என்று பார்த்திவ் பட்டேல் கூறினார்.

## 2018 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள

# உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியை இங்கிலாந்தில் நடத்த ஆலோசனை!

2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண கால்பந்து போட்டியை நடத்துவது பற்றிய ஆலோசனையில் இங்கிலாந்து அரச அதிகாரிகளும், அமைச்சர்களும் ஈடுபட்டதாக அந்நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் ரிச்சர்காபோன் தெரிவித்தார். இது குறித்து இங்கிலாந்து கால்பந்து சங்கத்துடனும் ஆலோசிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியை நடத்த இங்கிலாந்து அனுமதி கோரியிருப்பதாகவும், இந்தப் போட்டி நடைபெறும் இடத்தை சர்வதேச ஒலிம்பிக் சபை, அடுத்த ஆண்டு முடிவுசெய்த பின்னர், உலகக் கோப்பை கால்பந்து போட்டியை நடத்த அனுமதி கோரப்படும் என்றும் காபோன் தெரிவித்தார்.

சுழற்சி முறைப்படி 2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டி ஐரோப்பாவல் நடைபெறவுள்ளது. 2010 ஆம் ஆணடுக்கான உலகக்கோப்பை கால்பந்து போட்டியை நடத்த கடந்த வாரம் தென்னாபிரிக்காவுக்கு சர்வதேச கால்பந்தாட்டச் சங்க கூட்டமைப்பு அனுமதி வழங்கியது.

2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கோப்பை கால்பந்துப் போட்டி தென் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

ஐரோப்பாவைச் சேர்ந்த முக்கிய கால்பந்து நாடுகளான இத்தாலி, ஸ்பெயின், ஜேர்மனி ஆகிய நாடுகளில் சமீபத்தில் உலகக்கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெற்றுள்ளன. 1966 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டியே இங்கிலாந்தில் நடைபெற்றது.

ஒலிம்பிக் போட்டியை நடத்த வாய்ப்புக் கிடைத்தால், அது உலகக் கோப்பை கால்பந்து போட்டியை நடத்தும் வாய்ப்பைப் பாதிக்கும் என்று இங்கிலாந்து விளையாட்டுத்துறை இயக்குநர் ஜோன்ஸ் காட் தெரிவித்தார்.

## ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான

# இந்திய அணியின் பயிற்சி முகாம் பெங்களூரில் நடைபெறவுள்ளது!

(பெங்களூர்)

இலங்கையில் நடைபெறவிருக்கும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான 9 நாள் பயிற்சி முகாம ஜூலை மாதம் 3 ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ளதென இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை செயலர் எஸ்.கே.நாயர் தெரிவித்தார். தேர்வுச்சபை கூட்டத்திற்குப் பின்னர் இந்திய அணி அறிவிக்கப்படும் என்றும், இந்திய அணி ஜூலை 13 ஆம் திகதி இலங்கை செல்லும் என்றும் நாயர் தெரிவித்தார்.

இந்த நிலையில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கான உடற்தகுதி பயிற்சி முகாம் வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை பெங்களூரில் நடைபெறும் என்றும் நாயர் தெரிவித்தார். ஆஷிஷ் நெஹ்ரா, அஜித் அகார்கர், இர்பான் பதான், எல்.பாலாஜி, அமித் பண்டாரி, முனாப் படேல், அவிஷ்கர் சால்வி, ஸ்ரீசாந், எஸ்.எஸ். போல், எஸ்.மதூர், எஸ்.திரிவேதி, என்.சி.அய்யாப்பா, ககன்தீப் சிங், ஜோகிந்தர் சர்மா, முகமது பைசல், மற்றும் டி.குமரன் ஆகியோர் இந்த வேகப்பந்து வீச்சு உடற்தகுதி பயிற்சி முகாமுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக நாயர் தெரிவித்தார்.

ஜூன் 13 முதல் 19 ஆம் திகதி வரை ஒட்டுமொத்த உடற்தகுதி பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இதில் கங்கூலி, ஷேவாக், ராவிட், சச்சின், யுவராஜ், கைப், பார்த்தீவ் பட்டேல், அனில் கும்ளே, ஹர்பஜன் சிங், முரளி கார்த்திக், ரமேஷ் பவார், ஆகாஷ்சோப்ரா, ஹேமங் பதானி, சாய்ராஜ் பகுதுலே, சஹீர்கான், ஆஷிஷ் நெஹ்ரா, அஜித் அகார்கர், பதான், பாலாஜி, முனாப் படேல், பண்டாரி, ரோஹான் காஸ்கர், கௌதம் காம்பிர் ஆகியோர் கலந்து கொள்வர்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை மீது ஜனாதிபதி முஷாரப் அதிருப்தி!

பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் மீது மிகுந்த அதிருப்தியில் இருக்கும் அதிபர் முஷாரப், கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலைவர் ஷஹாரியார்கானை சந்திக்க மறுத்துவிட்டார். இந்தியா - பாகிஸ்தான் இடையேயான தொடருக்குப் பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் மீது பாகிஸ்தான் அதிபர் முஷாரப் மிகுந்த அதிருப்தியுடன் இருக்கிறார். இந்த அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார்கானைச் சந்திக்க முஷாரப் மறுத்துவிட்டார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர், அதிபர் முஷாரப்பை நேற்றுமுன்தினம் சந்திக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலாளரான ஷஹாரியார்கானை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவராக இவ்வாண்டு தொடக்கத்தில் முஷாரப் நியமித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அதிபர் முஷாரப்பைச் சந்திக்க அவரது அதிகாரபூர்வ இல்லத்தில் நாள்முழுக்க ஷஹாரியார்கான் காத்துக் கிடந்தார். கடைசியில் இந்தச் சந்திப்பு அடுத்த வாரத்திற்கு மாற்றியமைக்கப்பட்டுவிட்டதாக ஷஹாரியார்கானிடம் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி ஊகத்தின் அடிப்படையிலான செய்திகள் நிறைய வெளிவந்தாலும் முஷாரப்பை விரைவில் சந்திக்க இருப்பதாக கான் வெளியிட்ட செய்திக்குறிப்புத் தெரிவிக்கின்றது.

ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ளவே தான் இஸ்லாமாபாத் வந்ததாகவும் கான் தெரிவித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடத்தப்படும் விதம் குறித்து முஷாரப் அதிருப்தியில் இருப்பதால் அவரை சந்திக்க ஷஹாரியார்கானுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சமாதானம் குறித்த உண்மைநிலையை ஜனாதிபதி சந்திரிகா விளக்கவேண்டும்

## சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி தனது சமாதானம் தொடர்பான உண்மை நிலைப்பாட்டை மக்களுக்கு விளக்கவேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு நேற்றுமுன்தினம் அவர் அளித்த செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

சமாதான முயற்சிகள் குறித்தும், அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் குறித்தும் கதிர்காமர் ஒரு கருத்தையும், ஜனாதிபதி ஒருவித கருத்தையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்த முரண்பட்ட கருத்துக்கள் மக்கள் மத்தியில் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றன.

ஜனாதிபதி தனது உண்மை நிலைப்பாட்டை விளக்கிக் கூறுவதன் மூலம் மக்களின் குழப்பங்களையும், எமது குழப்பங்களையும் தீர்க்கமுடியும். கதிர்காமர் இந்தியாவில் ஒன்றையும், வொஷிங்டனில் ஒன்றையும் பேசுகின்றார்.

ஜனாதிபதியின் கருத்துக்களைத் தான் அவர் கூறுகின்றாரா என்ற சந்தேகம் பல மட்டத்திலும் வலுப்பெறத் தொடங்கியுள்ளது.

பேச்சுவார்த்தை சரியான திசையில் செல்வதற்கு ஜனாதிபதி தான் தனது உண்மை நிலைப்பாட்டை விளக்கவேண்டும்.

தமிழ் சிங்கள முஸ்லீம் மக்கள் மத்தியில் இந்தக் குழப்பம் அதிகரித்து வருகின்றமை சமாதானத்தின்மீது கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது. சமாதானத்தையே மக்கள் விரும்புகின்றனர்.

ஜனாதிபதி தனது அதிகாரத்தையும், ஆதரவையும் தக்கவைக்க சமாதான முயற்சிகளைச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



யாழ். சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெற்ற அன்னை ஈஸ்வரம்மா தின விழாவில் முன்னாள் வவுனியா அரச அதிபரும், சாயி நிறுவன ஆலோசகருமான செ. சிவஞானம் போட்டியில் வெற்றிபெற்ற ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (111)

# ஒருதொகுதி வெடிபொருட்கள் இராணுத்தினரால் அழிப்பு!

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருட்கள் - இராணுவப் பொறியியல் பிரிவினரால் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாக படைவட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை யாழ்.மாவட்டத்தில் பலாலி, சாவகச்சேரி ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் குடாகச்சைப் கொடியிலும், திருகோணமலையில் கொக்கிளாய் ஆகிய இடங்களிலும் இராணுவப் பொறியியல் பிரிவு வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது 75 மிதிவெடிகளும், 42 வெடிக்காத எறிகணைகளும் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வாரத்தில் ஒரு பெண் மட்டுமே மிதிவெடியில் சிக்கி காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.(03)

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் பாதீனியம் பரவுகிறது

யாழ்.மாவட்டத்தில் மீண்டும் சில பகுதிகளில் பாதீனியம் களை பரவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி முதலான பகுதிகளிலேயே இவ்வாறு பாதீனியம் பரவல் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதீனியம் களையானது தீவிரமாகப் பரவிவந்தபோது, விவசாய சம்மேளனம் மற்றும் விவசாயத் திணைக்களம் எனப் பல்வேறு அமைப்புக்களினதும், விவசாயிகளினதும் ஒத்துழைப்பால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனாலும், தற்போது மீண்டும் பரவத்தொடங்கியிருக்கும் பாதீனியத்தால், விவசாயிகள் பெரும் சிரமத்தை அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

தற்போது இதனைக் கட்டுப்படுத்த அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாதீனியக் களையை இல்லாதொழிப்பதற்காக இதற்கான களைநாசினிகளை விவசாய சம்மேளனங்களில் பெற்று, தோட்டங்களுக்கு விசிறுமாறு விவசாய சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (13)

# ரெலோவின் தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஏழாவது கட்சித் தேசிய மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டிருப்பதாக அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் கே.விந்தன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அவர் விடுத்த செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது -

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)வின் 6 ஆவது தேசிய மாநாட்டின் இறுதிப் பொதுக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வவுனியாவிலுள்ள தலைமைச் செயலகத்தில் ரெலோவின் உபதலைவர் கே.ஹென்றி மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் 7 ஆவது தேசிய மாநாட்டினை எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டதுடன், எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் மாவட்டரீதியாக பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்களும் நடைபெறவுள்ளது. அத்தோடு, மாவட்டச் செயலாளர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் கடந்த பொதுத்தேர்தல் செயற்பாடுகள் பற்றியும், கட்சியின் நிதி நிலைமைகள், சமாதானச் சூழலில் கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகம் என்.இந்திரகுமார் (பிரசன்னா), நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோ நோகராதலிங்கம், கே.சிவாஜிலிங்கம், தலைமைக்குழு உறுப்பினர் எல்.ரூபராசா (ரூபன்), பிரசாரச் செயலாளர் என்.விந்தன் கனகரத்தினம், நிர்வாகச் செயலாளர் எஸ்.சிறீஸ்கந்தராசா மற்றும் மாவட்டச் செயலாளர்களும் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏழை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் வசிக்கும் ஏழை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்விற்கு தமிழ் மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர் வி.கஜேந்திரன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் நளன் கலந்துகொண்டார்.

தமிழீழ மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த ச.நிலக்ஷன், தமிழர் மாணவர் அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் ச.எழிலன்பன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் 24 மாணவர்களுக்கு பல்வேறு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய கதைகள் வெளியீட்டுவிழா

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் 'புதிய கதைகள்' என்ற நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மலைமகளுடைய புதிய கதைகள் என்ற இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய ஆசிரியர் பத்மா ஜெயச்சந்திரன் தலைமைதாங்குவார்.

வெளியீட்டுரையினை கப்டன் வானதி வெளியீட்டகத்தைச் சேர்ந்த தமிழவள் நிகழ்த்துவார். நூலை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியிட்டு வைப்பார்.

இந்நூலுக்குரிய சிறப்புரையினை தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வழங்குவார்.

ஆய்வுரையை எழுத்தாளர் சாந்தன், வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் ஆகிய இருவரும் நிகழ்த்துவர். (17)

## வருடாந்த உற்சவம்

இராமநாதபுரம் மாவடி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஜூன் மாதம் 1 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 2 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 3 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

பகல் பூசையும் உள்வீதி உலாவும் இரவுப் பூசையும் வெளிவீதி உலாவும் இடம்பெறும்.

## சைக்கிள் உரிமைத்தகடுளைப் பெற்றுக்கொள்ளவும்

2004 ஆம் ஆண்டின் சைக்கிள்களுக்கான உரிமைத் தகடுகள் தற்போழுது வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசசபை நெல்லியடி உப அலுவலகம், உடுப்பிட்டி உப அலுவலகம், கட்டைவேலி உப அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை இந்த உரிமைத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாகப் பெற்றுக்கொள்ளுமாறு விசேட ஆணையாளர் சி.பசுபதி தெரிவித்தார். (116)

# மாவீரர் மேஜர் சூரியின் நினைவுக்கல் திரைநீக்கம்

தமிழீழ கடற்பரப்பில் கடந்த 01.05.2002 இல் நடவடிக்கை ஒன்றின் போது - வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் சூரி அல்லது சூரியன் (நாகேந்திரம் - கமலேந்திரன்) என்ற மாவீரரின் நினைவுக்கல் திரைநீக்கம் நேற்றுமுன்தினம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 4.15 மணிக்கு யாழ். மாவட்ட அரசியற் துறை நிர்வாகப் பொறுப்பாளர் வெ. தமிழ்மறவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஈகைச்சுடரினை மாவீரனின் தந்தையார் ஏற்றிவைக்க தாயார் நினைவுக்கல்லுக்கு மலர் மாலை அணிவித்தார்.

கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி, யாழ்.பிரதேசப் பொறுப்பாளர் செழியன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் வீரவணக்க உரை நிகழ்த்தினர்.

மாவீரரின் சகோதரன் நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

## சாதாரணதர மாணவர்களுக்கு கணித வகுப்பு

யாழ்.கரணவாய் பொன்னம்பல மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள வடமராட்சி கணிதமூலவள நிலையத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கணிதபாடத்தில் சித்தியடையாத க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கு வாரத்தில் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் காலை 11.00 மணிமுதல் 2.00 மணிவரை இலவச வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளது.

இவ் இலவச கணித வகுப்பில் கலவி கற்க விரும்பும் மாணவர்கள் தங்களது பெயர்களை வித்தியாலய அதிபரிடமோ அல்லது மூலவள பொறுபபாசிரியரிடமோ பதிவுசெய்து கொள்ளலாமென அதிபர் க.பொன்னையா அறிவித்தார். (116)

# இடைவிலகிய, மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவருத்தி நிறுவனம் - வட பகுதியில் இடைவிலகிய மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றினை அறிமுகப் படுத்தவுள்ளது.

வடபகுதியில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்கள் பாடசாலைகளில் மெல்லக்கற்கும் மாணவர்களுக்கும், இளைஞர்- யுவதிகளுக்கும் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான நிதி - நோர்வே நாட்டில் கல்வி கற்கின்ற மாணவர்களின் ஒருநாள் செயலமர்விலிருந்து பெறப்பட்டது.

இத்திட்டங்கள் - முதற்கட்டமாக ஐந்து மாவட்டங்களில் மேற்கொள்ளப் படவுள்ளன. அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும, வவுனிக்குளத்திலும், வவுனியா மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் கனகராயன் குளப்பகுதியிலும், மடுப் பகுதியில் ஆண்டான் குளத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் கணித, விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மெல்லக் கற்கும் மாணவர்களின் தரத்தினை உயர்த்துவதே முக்கிய நோக்கமாகும். (தீ)







# புதிய பாஸ்போட்



நோயாளிகளுக்குக் கடவுச்சீட்டுக்களை வழங்கும் திட்டமொன்று பிரித்தானியாவில் கொன்சவேட்ரிவ் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்திற்கு வைத்திய தாதிகளினால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் நோயாளி ஒருவர் தான் விரும்பும் இடத்தில் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடியும். இவ்வாறு சத்திரசிகிச்சையை மேற்கொள்ளும்போது, 60 வீதமான செலவை அரசு ஏற்றுக்கொள்ளுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒஸ்ரியாவில் இவ்வகையான திட்டத்துக்கு 80 வீதமான செலவை அரசு ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வகையான திட்டத்தின்மூலம் நோயாளி ஒருவர் சிகிச்சைக்காக எதிர்பார்த்திருக்கும் காலத்தைக் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கொன்சவேட்ரிவ் அங்கத்தவர்கள் தெரிவிக்கும்போது, தனிப்பட்ட வைத்திய நிறுவனங்களில் சிகிச்சை பெறும் திட்டம் பல ஐரோப்பிய நாடுகளில் நன்கு செயற்படுவதாக பின்லாந்திலும் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

# பிரச்சினை தரும் 'சிடி'

திருட்டு சிடிக்களால் பல பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன. அதிலும் திரைப் படங்கள் திரைக்கு வரமுதலே அதனைத் திருட்டு சிடிக்களில் எடுத்து விற்பதனால், திரைப்படத் தயாரிப்பாளர்கள் பாதிப்படைவது தெரிந்ததே.



கிரேக்கத்திலே திருட்டு விசிடி வற்பனையாளர்களுக்குப் பல தடவைகள் எச்சரிக்கை விடப்பட்டது. ஆனால், தற்போது மூன்று மாதங்கள் சிறை விதிக்கப்படும் என ஏதென்ஸ் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியிருக்கின்றது. கிரேக்கத்தினைப் பின்பற்றி ஐரோப்பிய நாடுகளும் இப்படியான சட்டங்களை இயற்றுவோமா என யோசித்துக் கொண்டிருக்கின்றன. மிகவும் மலிவான விலையில் கிடைக்கின்ற சிடிக்கள் பாவிப்பதற்கு இலகுவானவை. எங்கு பார்த்தாலும் தாராளமாகக் கிடைக்கின்ற சிடிக்கள் தற்போது ..ப்டப் கணினிகளிலும் இயங்க வைக்கக்கூடியதாக இருப்பதால், மக்களையும், சிடிக்களையும் பிரிப்பது மிகவும் கடினமானதாக இருக்கின்றது.



பெரும்பாலும், எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கிரேக்கத்தின் சிடிக்களின் விற்பனை மிகவும் அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஏறக்குறைய 1000 தெருவோர சிடி விற்பனை நிலையங்கள் எதென்ஸ் நகரில் காணப்படுகின்றன.

ஆனாலும், முதற் தடவையாக கைதுசெய்யப்பட்ட திருட்டு சிடி வியாபாரி நைஜீரியன் - மார்பியா கும்பலைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது.

# நாய்களுக்கும் மனிதர்களின் நோய்

மனிதர்களைப் போலவே நாய்களுக்கும் பலவகையான நோய்கள் வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கான காரணம் நாய்களில் காணப்படுகின்ற நிறமூர்த்தங்கள் ஆகும்.



ஏறக்குறைய 85 நாய்களில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி நாய்கள் புணர்ச்சியிலீடுபட்டு புதியவகை இனங்களை உருவாககுகின்றன. ஒத்த இனங்களிலேயே அதிக நோய்க் காரணிகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.



இதற்குக் காரணம் மனிதர்களில் காணப்படுவது போன்று ஒரே பரம்பரை அலகுகளுக்கான நோய்க் கடத்தலாகும். அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வுகளின்படி நாய்களுக்கும் புற்றுநோய் வர ஆரம்பித்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்கப் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தின் கருத்துப்படி சார்ப்பி பெக்கிங்கிஸ், சிட்சு, சைபேரியன் கஸ் ஆகிய நாய்கள் கூடுதலாக ஓநாய்களை ஒத்ததாகக் காணப்படுகின்றன. உண்மையில் இவ்வகையான நாயினங்கள் ஓநாய்களுடன் புணர்ச்சியில் ஈடுபட்டே உருவாக்கப்படுகின்றன. இந்தவகை நாய்களுக்கு நோய்கள் குறைவு.

நல்லின நாய்கள் என வர்ணிக்கப்படுகின்ற அல்சேஷன் மற்றும் ஜேர்மன் செப்பர்ட் போன்ற நாய்களுக்கே வகை வகையான நோய்கள் உருவாகுகின்றன. இதற்குரிய காரணம் நிற மூர்த்தங்களின் பாதிப்பாகும்.

பரம்பரை நோய்களில் மிக முக்கியமாக நாய்களில் காணப்படுவது லிம்போமஸ் என்ற பயங்கர நோயாகும். இந்த நோயே புற்று நோய்க்குரிய அடிப்படைக் காரணமாகின்றது.

# நல்ல பயிற்சி



உடல் ஊனமுற்ற மக்கள் தோட்டக்கலையில் ஈடுபடும்போது, தமது உடல், உள ஆரோக்கியத்தினை விருத்தி செய்துகொள்ள முடியுமென் பிரித்தானிய தொண்டு நிறுவனமொன்று தெரிவித்துள்ளது. சத்திரசிகிச்சைக்குப் பின் நோயாளி ஒருவர் இயற்கை அழகு மிக்க பூந்தோட்டங்களை உற்று நோக்கும்போது, விரைவாக தமது நோயிலிருந்து குணமடைந்து கொள்வதாகவும், குறைவான வலி நீக்கிகளை (**Pain Killers**) பாவிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.



இதனால், திட்டமிட்ட முறையில் தோட்டக்கலையில் ஈடுபடும்போது, தமது ஆரோக்கியத்தை விருத்தி செய்துகொள்ள முடியும். தோட்டக்கலைக்கு உபயோகப்படுத்தும் உபகரணங்களை ஒருவரின் தேவைக்கேற்றவாறு வடிவமைத்துக்கொள்வதால் முதியவர் எல்லோரும் தோட்டகலையில் தம்மை இணைத்துக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்டையாடுதல், தானியங்களைச் சேகரித்தல் ஆகியன மனித இனம் முதல் தோன்றிய போது செய்த தொழிலாகும். பின்னர் பயிற்ச்செய்கையை மேற்கொண்டிருந்தனர். இதனால், மனிதனின் மரபணுக்களுடன் பயிர்ச்செய்கை இணைந்துள்ளதெனக் கருதப்படுகிறது.

# தட்டையான திரைத் தொலைக்காட்சிகள்

தட்டையான திரைத் தொலைக்காட்சிகளை சந்தைக்கு விடுவதில் இலத்திரனியல் பொருட்களை தயாரிக்கும் நிறுவனங்களுக்கிடையே போட்டாபோட்டி நிலவி வருகின்றது. ஆனால், எல்.ஜி, பிலிப்ஸ் தொலைக்காட்சி நிறுவனம் உலகில் இரண்டாவது மிகப்பெரிய தட்டையான திரையையுடைய தொலைக்காட்சிப் பெட்டியை உற்பத்திசெய்து உலகளாவியரீதியில் 3.4 ரில்லியன் ரூபாவினை உழைத்திருக்கின்றது.



இப்போது வீட்டுக்கு வீடு மக்கள் தட்டையான திரையுடைய தொலைக்காட்சிப் பெட்டிகளையே விரும்புகின்றார்கள். கிட்டத்தட்ட வருகின்ற 10 வருடங்களில் 25 ரில்லியன் ரூபாவினை இந்த நிறுவனம் உழைக்கும் எனக் கூறப்படுகின்றது.

கொரியாவைச் சேர்நத எல்.ஜி. இலத்திரனியல் நிறுவனமும், டச்சு நாட்டைச் சேர்ந்த பிலிப்ஸ் இலத்திரனியல் நிறுவனமும் சேர்ந்து இந்தவகையான தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தயாரிக்கின்றன.

தற்போது இவற்றுக்குப் போட்டியாக தென்கொரிய நிறுவனமாகிய 'சாம்சங்' நிறுவனமும் இந்த வகையான தொலைக்காட்சிப் பெட்டிகளை உருவாக்குவதில் முன்னிற்கின்றன.

இத்தகைய தட்டடையான திரைகளுக்கு கணினித் தொழில்நுட்பத்தினைப் புகுத்தி விதம் விதமான வர்ணங்களைச் சேர்ப்பதிலும் தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆராய்ந்து வருகின்றன.

# நல்ல போட்டி




தனியாரால் வடிவமைக்கப்படும் விண்கலங்களுக்கான போட்டியொன்று, கலிபோர்னியாவில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் விண்கலமொன்று 329 ஆயிரம் அடி உயரத்தை 3 வாரத்துக்குள் இருமுறை சென்றடைய வேண்டுமென்பது போட்டியின் நிபந்தனையாகும். வெற்றி பெறுவதற்கு 5.7 மில்லியன் பவுண்ட்கள் பரிசாக வழங்குவதற்கு அன்சாரி எக்ஷ் எனப்படும் நிறுவனம் முன்வந்துள்ளது. விண்வெளி துறையில் முன்னோடியான பேட் ரட்டன் தனிப்பட்ட முறையில் அமைக்கப்பட்ட விண்கலம் பரிசோதனை நடத்தியபோது 211 ஆயிரம் அடி உயரத்தை அடைந்திருந்தது. 25 வேறு தனிப்பட்ட நிறுவனங்களும் இந்தப் போட்டியில் கலநது கொண்டுள்ளன. இந்தக் கலம் விண்வெளி வீரர்கள்மூலம் செலுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்க விண்வெளி அதிகார சபையினால், விண்வெளி ஆய்வுகள் நடத்துவதற்கு தனிப்பட்டவர்களுக்கு அதிகாரம் வழங்கியத்தில் பேட் ரட்டன் இன் நிறுவனம் குறிப்பிடத்தக்கதாகும்.

## திரை விமர்சனம்

# ஜனா





"பாட்ஷா" படத்தையே மறுபடியும் முயற்சி செய்து வெற்றி பெறவைக்கலாம் என நினைத்திருக்கின்றார்கள். திரைக்கதையை சரியாகச் செய்யவில்லை விளைவு? அஜித், சினேகா, ரகுவரன் இவர்களின் திறமை மற்றும் நடிப்பு வீணாகின்றது. கிராமத்துப் பெரியவர் ராதாரவியின் அட்டூழியத்தைத் தட்டிக் கேட்கின்றார். அஜித் மும்பையிலிருந்து வரும் ராதாரவியின் மகள் சினேகா அஜித்தின் மேல் காதல் கொள்கின்றார். அஜித் ஏற்கனவே மும்பையில் ரகசிய தாதாவாக இருந்து ஏழைகளின் காவலனாக இருந்தவர் என்பதை அறிந்து அவருடைய காதல் உறுதியாகிறது. மும்பை தாதா சித்திக்கிராமத்துக்கு வருகிறார். அவரை அஜித் அழிக்கிறார். இதுதான் ஜனா படத்தின் கதை கிராமத்தில் பட்டுவேட்டி வீட்டுக்குள் அமைதியான பையன். ஊருக்குள் ரகசிய தாதாவாக வலம் வரும் அஜித் தன்பங்கை வடிவாகச் செய்திருக்கிறார். ஆனால், படத்தில் புதுமையான காட்சிகள் இல்லை 200 கோடி வெடிமருந்துக் குவியல்களை ஒளித்துவைக்க ஒரு பள்ளியில் பதுக்கவேண்டும் என்று கேட்கும் முட்டாள் தாதா இருக்கிறானா?

வழக்கமாக இயக்குநர் ஷாஜி கைலாஷ் படங்களில் இருக்கின்ற வழக்கமான விறுவிறுப்பு இல்லை. படத்தில் - தப்பு நடந்தா அங்கே நான் வருவேன் அது என் தப்பில்லை என்கிற ரஜினி ஸ்டைல் வசனங்கள் மும்பை தாதா சித்திக்கைக் கொன்றவுடன் படம் முடிகின்றது. ராதாரவி, சினேகா காதல்? எல்லாம் முடியவில்லை. சினேகா, அஜித்தைத் துரத்தித் துரத்திக் காதல் செய்கின்றார். கருணாஸ், வையாபுரி நகைச்சுவைக் கூட்டணி பரவாயில்லை பாதிக்கடிமழை, சண்டைப் பயிற்சி கனல் கண்ணன் மற்றும் பீட்டர் ஹெயின்ஸ் அடிச்சு உதறியிருக்கிறார்கள். தீனாவின் இசை அவ்வளவாக எடுபடவில்லை.

'ஜனா' ஜனங்கள் மனதில் நிலைக்காது.

# மெக்சிக்கோ



# பிரமிட்டுக்கள்

மெக்சிக்கோவில் பல பிரமிட்டுகள் காணப்படுகின்றன இப்பிரதேசங்களில் தியோதிகுகாகன் (Teotihuacan) எனப்படும் ஆதிக்குடியேற்றவாசிகளின் நாகரிகம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் பிரமிட்டுக்களில் அந்தக் காலத்து மன்னர்கள் புதைக்கப்பட்டடிருக்கலாமெனவும் கருதப்பட்டுள்ளது இப்பிரமிட்டுக்களில் எப்பகுதியில் மன்னர்கள் புதைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவதற்கு புதைபொருள் ஆய்வாளர்கள் தீர்மானித்துள்ளனர். இதனால் பௌதீகத்தின் கண்டுபிடிப்புக்களை இந்த ஆய்விற்கு பயன்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளனர். பிறகிரகங்களிலிருந்து வெளியேறும் கொஷ்மிக்கதிர்கள் பூமியில் மோதும்போது மீயூன்ஸ் (Muons) எனப்படும் துணிக்கைகள் உருவாகின்றன. கொஷ்மிக் கதிர்கள் பொருளொன்றினூடாக ஊடறுத்துக் செல்லும்போது, அதன் பாதையிலுள்ள மூலக்கூறுகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. பிரமிட்டுக்களில் இடைவெளி காணப்பட்டால் செல்லும் பாதையில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. மெக்சிக்கோ பல்கலைக்கழக விஞ்ஞானியான 'ஆர்ருரோ' கருவி ஒன்றை உருவாக்கியுள்ளார். பிரமிட்டுக்களின் அடிப்பாகத்தில் காணப்படும் சுரங்கங்களில் இக்கருவியைப் பொருத்தி பிரமிட்டுகளில் காணப்படும் வெற்றிடங்களை ஆராய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம் மன்னர்கள் புதைக்கப்பட்டுள்ளார்களா என்பதை அறிந்துகொள்ள முடியுமென தெரிவித்துள்ளனர்.

# உற்சாகமான ரிவி கேம்கள்

சிறுவர்களை மிகவும் உற்சாகப்படுத்தக்கூடிய ரிவி கேம்கள் தற்போது பெரியவர்களையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது. அண்மையில் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வெளியிடப்பட்ட ஈ 3 வகை கேம் கட் - எல்லோரையும் கவர்ந்திருக்கின்றன. இவை வித்தியாசமானவையாகவும் அத்துடன், புதுமை தரக்கூடியனவாகவும் இருக்கின்றன. ஏறக்குறைய 29.95 அமெரிக்க டொலர்களை மாதக் கட்டணமாகக் கட்டினால் ரிசீவர் மற்றும் லப் பாட் கேம்பாட் ஆகியவற்றைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.





இதில் காணப்படுகின்ற சேவைகள் செய்மதித் தொலைக்காட்சிகளை ஒத்தவை. கேபிள் ரிவி தொடர்பு போல ரிவி கேம் தொடர்புகளும் தற்போது கொடுக்கபபட்டுக் கொண்டிருக்கின்றன. பன்டோம் வகையான ரிவி கேம்கள் மிகவும் புதுமையானதாகவும் பழமையவற்றுடன் ஒப்பிடும்போது, புதிய வடிவங்களைக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

கேம் பக்கேஜ்களும் கிடைக்கின்றன. அதனைவிட மக்கள் கேபிள் கேம் தொடர்புகளையே விரும்புகிறார்கள். இதனுடைய ரிசீவர் எக்ஸ். பி 2500 + சீ.பி.யூ. அத்துடன் 40 ஜிகாபைட்களாக உள்ளது. இது பி சி கேம்களின் வரலாற்றில் ஒரு புதிய பரிணாமம் எனக் கூறலாம்.

# அப்பிள் புதியது

புதிய வகைக் கணினிகள் நாளுக்கு நாள் சந்தையில் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. சர்வதேச அளவில் பெயர்போன அப்பிள் கணினி நிறுவுனம் சிறந்த ஒரு கணினி ஒன்றை மலிவான விலையில் கொடுத்திருக்கின்றது. இதிலே 18 டிஜிட்டல் இசைக்கருவிகளை இயக்கக் கூடியதாக இருக்கின்றது. இது முதல் மூன்று மாதங்களிலும் 807,000 வரை விற்றுத் தீர்ந்திருக்கிறது. இந்த வகை கணினிகள் கூடுதலான எம்.பி 3 பிளேயர்களைக் கொண்டன. இதில் காணப்படும் மின்கலம், மின்சாரம் இல்லாத வேளைகளில் கூட எம்.பி 3 இணை இயக்கவைக்கக் கூடியவாறு செய்யப்பட்டிருக்கின்றது. இதற்குப் போட்டியாக டெல் டிஜிட்டல்றெட்வோர்கஸ் கிறியேட்டில் லாப்ஸ் மற்றும் ஆர்சோவ்ஸ் ஆகிய எம்.பி 3 கணினி நிறுவனங்கள் பலதரப்பட்ட கணினிகளாகத் தயாரித்துக் கொண்டிருக்கின்றன.




ஆனாலும், கிற்றாச்சி நிறுவனம் தயாரித்திருக்கின்ற 4 ஜி.பி.டிஸ் பிளேயர் கிட்டத்தட்ட அப்பிள் கம்பனியை விழுத்திவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எது எப்படி இருந்தாலும் அப்பிள் கணினிக்கம்பனிக்கு நிகர் அது தான்.

# ஆமை அகற்றல்



பங்களாதேஷின் தென்பகுதி நகரான சிற்றாகொங்கில் காணப்படும் நீர்த்தேக்கத்தில் அரிய வகையான கடலாமைகள் காணப்பட்டன. 500க்கும் மேற்பட்ட இவ்வகை கடலாமைகளை வேறு இடத்திற்கு அகற்றும் பணியில் வனவிலங்கு விற்பன்னர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த நீர்த்தேக்கம் பள்ளிவாசல் ஒன்றுக்கு அருகில் அமைந்திருந்தது. இந்நீர்த்தேக்கத்தில் நச்சுப் பொருட்கள் கலக்கப்பட்ட பின் கடுமையான ஓடுகளைக் கொண்டிருந்த ஆமைகள் அகற்றப்பட வேண்டியிருந்தது. அப்பிரதேசத்தில் வாழ்ந்த இந்துக்கள் மத்தியில் இவ்வகை ஆமைகள் மத வணக்கத்துக்குரிய விலங்காகவும் இருந்துவந்ததால், நீரில் நஞ்சு கலக்கப்பட்டதும் முதலில் மீனகள் அழிந்துவிட்டன. இதனால், ஆமைகளை உடன் அகற்ற வேண்டியிருந்தது. வனவிலங்கு அதிகாரிகள் வலைகளில் இந்த ஆமைகளைப் பிடித்து வெளியேற்ற வேண்டியிருந்தது. உலகில் பங்களாதேசிலும், அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியிலும் இந்தவகை ஆமைகள் காணப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கடல் மருந்துகள்



கடலின் அடிப்பாகத்தில் வாழும் விலங்குகளும், தாவரங்களும் நோய் எதிர்ப்பு மருந்துகளையும், வலி நிவாரணிகளையும் தயாரிப்பதற்கு பயன்படுத்தலாமென விஞ்ஞானிகள் தெரிவித்துளளனர். இவ்வகையான விலங்குகளினதும், தாவரங்களினதும் பயன்பாடுகள் அறியப்படு முன்னரே அவை அழிந்துவிடலாமெனவும் தெரிவித்துள்ளனர். காலநிலை மாற்றம், அதிகளவில் மீன்கள் பிடித்தல், சூழல் மாசடைதல், இவற்றை அழித்துவிடுவதாகவும் தெரிவித்துள்ளனர். அண்மையில் கடல்வாழ் உயிரினங்கள் தொடர்பான விஞ்ஞான தொழில்நுட்ப கருத்தரங்கு அயர்லாந்தில் நடைபெற்றபோது, இக்கருத்து தெரிவிக்கப்பட்டது. உயிரினங்கள் முதலில் கடலில் தோன்றி, நிலத்தில் பரிணாம வளர்ச்சியைக் கண்டதெனவும், இதனால் கடல்வாழ் உயிரினங்களின் மூலம் மிகுந்த பயன்பாடுகளைப் பெறமுடியும் எனவும் பே[illegible]ரியர் கரோல் கெல்ப் தெரிவித் தார். கடல்வாழ் உயிரினங்களில் சிறிய தொ[illegible] இதுவரை ஆராயப்பட்டுள்ளன. அத்துடன், நுண்ணுயிர்கள் ஆராயப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். கடல்வாழ் உயிரினங்கள் பரந்தளவில் எதிரிகளைக் கொண்டுள்ளன. உயிர்வாழ்வதற்குப் பல உத்திகளைக் கையாளவேண்டியுள்ளது. சில விலங்கினங்கள் உண்பதற்கு சுவையாகவும் அமைவதில்லை. அத்துடன், நஞ்சுப் பொருட்களும் உடலில் சுரக்கின்றன. இதன்மூலம் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்கின்றன. சில உயிரினங்கள் இடத்திற்கிடம் நகர்வதில்லை. இதனால், தமது உடலின் மேற்பரப்பில் இரசாயனப் பொருட்களைச் சுரக்கின்றன. கிரும[illegible]கள் இவற்றின் உடலில் வாழ்வதற்கு ஏற்றதாக அமைவதில்லை. இவ்வகையான இரசாயனப் பொருட்களைப் புதிய மருந்துகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்த முடியுமென தெரிவித்துள்ளனர். தொற்று நோய்க்கு எதிரான மருந்துகளை தயாரிப்பதற்கான இரசாயனப் பொருட்களையும் ஆராய்ந்து வருகின்றனர். இந்தோ - பசுபிக் கடற்பிரதேசத்தில் வாழும் நத்தைகள் நச்சுப்பொருட்களைச் சுரக்கின்றன. இந்த இரசாயனப் பொருட்கள் வலி நீக்கும் மருந்துகளைத் தயாரிப்பதற்கு உதவமுடியுமெனவும் அந்த ஆய்வில் மேலும் தெரிவித்துள்ளார்.

செய்திக் கட்டுரை... - பட்டனைந்து

# "யாழ்.கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியும் அதன் புதிய கட்டடத்திற்கான எடுகோளும்"

சிங்கள தேசம் எம்மீது திணித்த யுத்தம் காரணமாக வடக்குக் - கிழக்கில் பல அபிவிருத்தி வேலைகள் முடங்கிப் போயின. அவ்வகையில் ஜீவனோபாய விடயங்களும், கல்வி சார்ந்த வளர்ச்சிகளும், குடியிருப்பு, உடை போன்ற அத்தியாவசிய வேலைகளும் வேறு மாகாணங்களோடு ஒப்பிடுகையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பின்தள்ளப்பட்டிருப்பது கண்கூடு.

ஒரு பிரதேசத்தின் முக்கிய தேவை உணவுத் தேவையாகும். அதற்குள் விவசாயம், மீன்பிடித் தொழில்கள் முதன்மை வகிக்கின்றன.

இவ்வாறான தொழில்களை விஞ்ஞான ரீதியில் வளர்த் தெடுக்க வேண்டிய காலகட்டத்தில் தான் எம்மீது யுத்தமொன்றை சிங்கள தேசம் திணித்தது.

ஆயினும், இங்கே நெருக்குக் காலங்களில் வாழ்ந்த மக்கள் உயிருக்கு ஆபத்தானதும் களனிக்கும், கடலுக்கும் சென்று உழைத்து வந்தனர். அச்சமயங்களில் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டதும் உண்டு.

விவசாய தொழிலுக்கு கமத்தொழில் திணைக்களம் போன்றே மீன்பிடித் தொழிலுக்கு மீன்பிடி இலாகா அரசால் அமைக்கப்பட்டது.

விவசாயம் சார்ந்த செயற்பாடுகள் ஓரளவுக்கு நெருக்கடிக் காலங்களில் நிறைவெய்திய போதும், மீன்பிடி சம்பந்தமான மீன்பிடி இலாகா முழுக்கச் செயலிழந்து போயிருந்தது என்றே சொல்லவேண்டும்.

அதனால், அந்த திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்ட பல நிறுவனங்கள் செயல் இழந்து கிடந்தன. அவற்றில் ஒன்றுதான் யாழ். பாங்ஷால் வீதி, கடற்கரை வீதி, 2 ஆம் குறுக்கு வீதி ஆகியவற்றிக்கு உட்பட்டிருந்த கடற்தொழில் பயிற்சி நிலையம்.

இந்நிலையம் இப்பொழுது யாழ்கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியாக தரத்தில் உயர்ந்த நிலைக்கு வருமுன்பாக இருந்த நிலையினை சுற்றிச் சுழல்கிறது. இந்தச் செய்திக் கட்டுரை.

1973 ஆம் ஆண்டு 22 அலுவலர்களோடு 15 மில்லியன் ரூபா செலவில் பயிற்சி உபகரணங்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட கடற்தொழில் பயிற்சி நிலையத்தில் இருந்து 1983 ஆம் ஆண்டுக்கு உட்பட்ட பத்தாண்டு காலத்திலும் 384 பயிற்சியாளர்கள் பயிற்சியை முடித்து வெளியேறி இருந்தனர்.

1983 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு தமிழ்ப் பிரதேசங்களில் திணிக்கப்பட்ட யுத்தத்தினால் கட்டடமும், பயிற்சியை மேற்கொண்ட சாதனங்களும் அழிந்து விட்டன.

15 வருடங்களுக்கு பிற்பாடு 1999 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இந்தக் கடற்தொழில் பயிற்சி நிலையம் யாழ்ப்பாண கடற்தொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியாக மாறும் பெறறு சொந்தக் கட்டடத்தில் அல்லாமல் வசதிகள் குறைந்த ஒரு தனியார் வீடொன்றில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் தலைமைக் காரியாலம் கொழும்பு-15, மட்டக்குளியில் அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேசிய நிறுவன இயக்குனர், அரச அதிபர், கடற்தொழில் உதவிப் பணிப்பாளர், யு.என்.எச்.சி.ஆர். முன்னாள் டி.எஸ். ஓ.ச்சிதானந்தம் ஆகியோரின் ஒத்துழைப்பே திரும்பவும் இக்கல்லூரி யாழில் தோன்றக் காரணமாயிற்று என்று இதன் அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை குறிப்பிடுகிறார்.

இவர் 1983 ஆம் ஆண்டுக்கு முன்னால் கடற்தொழில் பயிற்சி நிலையத்தில் பயின்று வெளியேறி இருந்த 384 பேர்களில் ஒருவர் ஏன்பதும் அறிய வேண்டிய ஒன்றுதான்.

1999 இல் இருந்து 2003 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 108 பயிற்சியாளர்கள் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறி உள்ளர். குறுகிய கால மீன்பிடியியல் தொழில்நுட்ப வெளிக்கள பயிற்சி நெறிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்தொழில் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு கடற்தொழில் பரிசோதகர்களின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டிருக்கிறது.

2001 ஆம் ஆண்டு மீன்பிடியியல் மற்றும் நீரியல் வளத்துறை கௌரவ அமைச்சரும், தலைமை இயக்குநரும் வருகைதந்து ஒரு தொகுதி பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிச் சென்றனர்.

**யாழ்.அரச அதிபர் ஊடாக கல்லூரிக்கு புதிய கட்டடம் அமைக்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உத்தேசமாக 26 மில்லியன் ரூபா செலவாகுமென அறியப் பட்டிருக்கிறது. புதிதாக அமைக்கும் கல்லூரி முன்னைய காணியிலா? அல்லது பிறிதொரு இடத்திலா அமையும் என்பதில் இழுபறி இருந்து வரு கிறது.**

மட்டக்களப்பு, திருகோணமலை, தங்காலை, நீர்கொழும்பு, மட்டக்குளி ஆகிய பிரதேசங்களில் இது போன்ற கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அதேவேளை தங்காலையில் இதுசார்ந்த சர்வகலாசாலை இயங்கி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இப்பொழுது இக்கல்லூரியில் கடலக இயநதிர பயிற்சி நெறிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற போதும் நவீன போதனா உபகரணங்களும், போதனா ஆசிரியர்களும், அலுவலர்களும் இல்லாமல் இருந்து வருகிறது. 1973இல 22 அலுவலர்கள் கடமையில் இருந்தனர். இப்பொழுது 7 அலுவலர்கள் மட்டுமே பணி புரிகின்றனர்.

மேலும் 3 1/2 தொன் எடையுள்ள பயிற்சிக் கலம் உடனடியாகத் தேவைப்பட்டும் அத்தகைய வசதிகள் இல்லாத நிலையிலேயே கல்லூரி இயங்கிவருகிறது.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி மீன்பிடிப் பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கும், படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உதவியாகப் புத்தகங்களும், படித்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடங்கி மூன்று மாத பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பயிற்சிகளில் ஈடுபடுகின்ற மாணவர்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் ஊக்குவிப்புப்படி வழங்கப்படுகிறது. இதற்கான நிதி உதவிகளை போரூட், ஜீ.ரீ. இசற் ஆகிய நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

இப்பொழுது 372, பாங்ஷால் வீதி எனும் முகவரியில் இயங்கும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு சொந்தமான காணி முன்பு தெரிவிக்கப்பட்ட (அதி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்ட) இடத்தில் அனாதரவாகக் காடுபற்றிக் காட்சி அளிக்கிறது.

யாழ்.அரச அதிபர் ஊடாக கல்லூரிக்கு புதிய கட்டடம் அமைக்கும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உத்தேசமாக 26 மில்லியன் ரூபா செலவாகுமென அறியப் பட்டிருக்கிறது.

புதிதாக அமைக்கும் கல்லூரி முன்னைய காணியிலா? அல்லது பிறிதொரு இடத்திலா அமையும் என்பதில் இழுபறி இருந்து வருகிறது.

முன்னைய இடத்தில் இப்பொழுது அதியுயர் பாதுகாப்பு வலயம் இருந்து வருவதால் அல்லைப்பிட்டி போன்ற பிற பகுதிகளில் நிறுவுவதற்கு முடிவெடுத்தாலும், பயிற்சி நெறிகளை வழங்குவதற்கான கடல்வளம் கல்லூரிக்கு அருகிலேயே அமைய வேண்டுமென்பதால், இந்த இழுபறி நிலை தொடர்ந்து வருகிறது.

இது தொடர்பாக தற்போதைய அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளையிடம் கேட்டபோது,

"நிரந்தரக் கட்டடம் அமைக்கும்போது நீச்சல் தடாகம் தேவை. பயிற்சியாளர்கள் தங்கும் வசதிகள், ஆராய்ச்சிக் கப்பல்கள், அதற்குரிய அலுவலர்கள், கப்பலோட்டிகள், உபகரணங்கள், வாகனங்கள், கலங்களை நங்கூரம் இடும்களம் கலங்களைப் பழுதுபார்க்கும் இடமும், கடலோடு கூடிய இடமுமாக நீர்வளம் வாய்ந்த பகுதியாக இருத்தல் அவசியம்" எனத் தெரிவித்தார்.

ஆகவே யாழ்.கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியை புதிதாக நிறுவ நிதி தயாராக இருந்தபோதும், இடவசதியீனம் காரணமாக கட்டட வேலைகள் இழுபட்டுச் செல்வதானது கவலைதரும் செய்தியாகவே இருக்கிறது.

அகதி வாழ்வின் அவலங்கள் - பகுதி 48 - சிவாசின்னப்பொடி

# பெற்றோரின் இயந்திர வாழ்க்கை இடிக்கப்பட்ட இரண்டு உயிர்கள்

புலம்பெயர்ந்த தமிழர்களை குறிப்பாக சுவீஸ் வாழ் தமிழர்களை உலுக்கிய ஒரு அவலம் 2000 ஆம் ஆண்டு சுவீஸின் கூர் மாநிலத்தில் நடந்தது.

யாழ்ப்பாண குடாநாட்டைச் சேர்ந்த அந்தக் குடும்பத்துக்கு இரண்டு பிள்ளைகள். மூத்த பெண் பிள்ளைக்கு 5 வயது, கடைசி ஆண் குழந்தைக்கு வயது 8 மாதம். தந்தை கூர் நகரத்தின் புறநகர் பகுதியிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து வந்தார். தாய் அவர்கள் குடியிருந்த வீட்டுக்கு எதிரிலிருந்த உணவு விடுதி ஒன்றில் வேலை செய்து வந்தார்.



தந்தைக்கு இரவு வேலை தாய்க்கு பகல் வேலை தாய் மாலை 5 மணிக்கு வேலை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வர தந்தை 6 மணி வேலைக்கு புறப்பட்டுச் செல்வார்.

அன்று - அந்த தந்தைக்கு தனது நண்பர் ஒருவரை பார்த்துவிட்டு வேலைக்குச் செல்ல வேண்டிய தேவை இருந்ததால் அவர் மாலை 4 மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார். புறப்படும் போது தனது 5 வயதுப் பெண் குழந்தையிடம் 'தம்பியை கவனமாகப் பார்க்கும்படியும், அம்மா கெதியா வந்து விடுவா' என்றும் சொல்லி விட்டுச் சென்றார்.

குழந்தை அழுதால் கொடுப்பதற்கு போச்சியில் பால் மாவையும் கரைத்து வைத்து விட்டுச் சென்றார்.

தந்தை வேலைக்குச் செல்லும் போது உறக்கத்தில் இருந்த அந்த ஆண் குழந்தை ஒரு 4 1/2 மணிபோல கண் விழித்து அழ ஆரம்பித்தது.

'தம்பி பசியில் அழுவதாக' நினைத்த பெண் குழந்தை தந்தை கரைத்து வைத்து விட்டுச் சென்ற பாலை எடுத்துப் புகட்டியது.

ஆனால், அந்தக் குழந்தை அதைக் குடிக்காமல் தொடர்ந்து அழுதது. தம்பியைத் தூக்கி மடியில வைத்து ஆட்டிய போதும் அழுகை நிற்கவில்லை.

விளையாட்டுச் சாமான்களை கொடுத்து சமாதானப்படுத்த முயன்ற போதும், முடியவில்லை.

அந்தப் பெண் குழந்தைக்கு தன் தம்பியின் அழுகையை எப்படி நிறுத்துவது என்று தெரியவில்லை.

தம்பியைத் தூக்கி - தோளில் சாய்த்து ஆட்டிய போதுான். அவன் கட்டியிருந்த 'பம்பஸ்' சிறுநீர் கழித்து நனைந்து போயிருந்தது தெரியவந்தது.

ஈரமான பம்பஸ் காரணமாகவே தம்பி அழுகிறான் என்று நினைத்த அந்தப் பெண் குழந்தை அதைக் கழற்ற முனைநதது.

சாதாரண பம்பஸ்சுகளுக்கு பக்கவாட்டாக கழட்டும் முறை இருக்கும். ஆனால், அந்தக் குழந்தையின் தம்பி அணிந்திருந்தது. இலாஸ்ரிக் வைத்த பம்பஸ், கால் சட்டை கழற்றுவதைப் போல கால்கள் வழியாகத் தான் அதைக் கழற்ற வேண்டும்.

ஆனால், அந்தக் குழந்தைக்கு அது தெரியவில்லை. அது பக்கவாட்டிலுள்ள ஒட்டும் ஸ்டிக்கரை தேடிப்பார்த்தது. அதைக் கண்டு பிடிக்க முடியாதபோது, திடீரென்று அந்தக் குழந்தைக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

கத்திரிக்கோலால் அந்தப் பம்பஸ்சை வெட்டிக் கழற்றி விடலாம் என்பதே அந்த எண்ணம். தம்பியை தொட்டிலில் படுக்கவிட்டு ஓடிச்சென்று அம்மா தையலுக்கு துணிவெட்ட வாங்கி வைத்திருந்த கத்திரிக்கோலை எடுத்து வந்தது.

தம்பியின் ஒரு காலை பிடித்துக் கொண்டு பம்பஸ்சின் கீழ் பகுதியில் கத்திரிக்கோலைக கொடுத்து அதை வெட்டுவதற்கு அந்தப் பெண் குழந்தை முயன்றது.

தம்பி காலை உதறி திமிறியதால் அது முடியவில்லை. பின்பு தம்பியை தூக்கு செட்டியில் படுக்கவிட்டு இரண்டு காலையும் அமத்திப் பிடித்துக் கொண்டு பம்பஸ்சை வெட்ட முனைந்தது.

பிள்ளை கத்திரிக்கோலை வெட்டுவதற்கு அழுத்த குழந்தை திமிற அவனது ஆண் குறியின் விதைப் பகுதி வெட்டுப்பட்டு விட்டது.

குழந்தை வீரிட்டு அலற இரத்தம் பீரிட்டுப் பாய்ந்தது.

பயந்துபோன பெண் குழந்தை ஓடிச் சென்று துணிகளை எடுத்து வந்து இரத்தத்தை துடைத்து அதை நிறுத்த முயன்றது.

காயப்பட்ட குழந்தை வலியில் கத்தோ கத்தென்று கத்த என்ன செய்வதென்று தெரியாமல் அந்தப் பெண் குழந்தை திகைத்துப்போய் நின்றது.

கடைசியில் 'ஓடிப்போய் அம்மாவைக் கூட்டி வரலாம்' என்ற எண்ணம் அதற்கு வந்தது.

தாய் வேலை செய்யும் உணவு விடுதி அவர்கள் வீட்டிலிருந்து ஒரு 100 மீட்டர் தூரத்தில் வீதிக்கு மறுபுறத்தில் இருந்தது.

தாங்கள் குடியிருந்த அடுக்கு மாடிக் கட்டடத்திலிருந்து - பதட்டத்துடன் படி வழியாக இறங்கிய அந்தக் குழந்தை எதிரில் இருந்த வீதியை ஓடிக் கடந்தது.

அதற்கிருந்த பதட்டத்தில் - அது வீதியில் வாகனங்கள் வருவதை கவனிக்கவில்லை. வலப்புறத்திலிருந்து வேகமாக வந்த கார் ஒன்று சடுதியாக வீதியைக் கடந்த அந்தக் குழந்தையை அடித்துத் தூக்கி எறிந்தது. எதிரிலிருந்த உணவு விடுதியில் வேலை செய்து கொண்டிருந்த தாய் செய்தி அறிந்து ஓடிச் சென்று பார்த்த போது குழந்தை நினைவு தப்பிய நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது.

அவசர முதலுதவிக் குழுவினர் வந்து வ்பத்துக்குள்ளான பெண் குழந்தையை மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது - தாயும் உடன் சென்றார். அப்போதிருந்த பதட்டத்தில் வீட்டில் இருந்த ஆண் குழந்தையைப் பற்றிய நினைப்பு தாய்க்கு வரவில்லை.

மருத்துவமனையில் மூன்று மணி நேரத்துக்கும் அதிகமாக விபத்துக்குள்ளான அந்தப் பெண் குழந்தைக்கு சிகிச்சையளிக்கப்பட்ட போதும் அது நினைவு திரும்பாமல் உயிரிழந்து விட்டது. பின்புதான் வீட்டிலிருந்த குழந்தை பற்றிய நினைப்பு வந்தது. தாய் மருத்துவமனை வாசலில் இருந்து உயிரிந்த பெண் குழந்தையை நினைத்து கதறிக் கொண்டிருக்க, உறவினர்கள், நண்பர்கள் அவர்களுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்க குழந்தையின் தந்தை நண்பர் ஒருவரின் காரில் வீட்டுக்கு ஓடிச் சென்று பார்த்தபோது...

அந்த 8 மாதம் நிரம்பிய அந்த ஆண் குழநதையும் அதிக இரத்தம் வெளியேறியதால் உயிரிழந்திருந்தது. ஒரே வீட்டில் ஒரே பெற்றோரின் இரண்டு பிள்ளைகள் அதுவும் பிஞ்சுக் குழந்தைகள் ஒரே நேரத்தில் உயிரிழந்த அவலம் சுவீஸ் வாழ் தமிழர்களை மட்டுமல்லாது சுவீஸ் நாட்டு மக்களையும் உலுக்கியது. (தொடரும்)

**எமது பத்திரிகையில் வெளிவந்து கொண்டிருந்த 'தொடரும் அகதி வாழ்வின் அவலங்கள்' என்ற சிவாசின்னப்பொடியின் தொடர்கட்டுரையின் இறுதிப் பகுதிகள் தொடர்ந்து வெளிவர இருக்கின்றன. இந்த வகையில் கட்டுரையின் 48 ஆவது பகுதி இன்று வெளியாகின்றது.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்தோ சால்பு

திருக்குறள்

# நமது நோக்கு

## இந்தியா உணரும் காலம் எப்போது ?

இந்தியாவில் புதிய அரசு பதவியேற்ற பின்னர் அது விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்கும் அறிவிப்பை வெளியிட்டுள்ளது. சமாதானத்தையும் அமைதியையும் நேசிக்கும் அனைத்து மக்களுக்கும் இது ஏமாற்றத்தையும், மனச்சோர்வையும் அளிக்கும் செய்தியாக இருக்கின்றபோதிலும், இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை அறுதிப் பெரும்பான்மை பலமற்றநிலையில், சக கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுப் பலத்தின் மீதான நம்பிக்கையில் மட்டும் ஏற்றுக் கொண்டுள்ள மன் மோகன் சிங் தலைமையிலான அரசாங்கத்திற்கு தற்போதுள்ள கையறு நிலையில் இப் பிரச்சினையில் இதனைவிடவும் வேறுமுடிவொன்றினை எடுக்கும் நிலையோ, துணிச்சலோ இல்லையென்றே கூறவேண்டும்.

அத்துடன் இந்திய அரசு விடுதலைப்புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் இப்படியானதோர் அரசியல் சுயநல அபிலாஷையுடன் கூடிய ஒரு முடிவை எடுக்கவேசெய்யும் என்பதும் இந்தியாவின் இந்திய கொள்கை வகுப்பாளர்களின் சுயம் உணர்ந்தோர் ஏற்கனவே நன்கு அறிந்துள்ள விடயமும் ஆகும்.

இந்திய மத்திய அரசின் வெளியுறவு தொடர்பான கொள்கைகள் அனைத்தையும் சுயாதீனமாகத் தீர்மானிக்கும் எந்த விதமான முழுமையான அதிகாரமும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் எந்த அரசுக்கும் கிடையவே கிடையாது.

ஏற்கனவே அரசியல் கொள்கைவகுப்பாளர்கள் என்ற அமைப்பிலுள்ள பல்வேறு துறைசார்ந்த, ராஜதந்திர நிர்வாகத் திறன் மிக்க வல்லுனர்கள், உளவுத்துறை சார்ந்த நிபுணர்கள் போன்றோரின் தொடர்ச்சியான ஆய்வுகள், மதிப்பீடுகள், விவாதங்கள், போன்றவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படும் வெளிநாடுகள் தொடர்பான கொள்கைகளின தன்மைகளுக்கமையவே ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் எந்த அரசும் செயற்படவேண்டும் என்பது தவிர்க்கமுடியாத அவசியம் என்பதே இந்திய அரசியல் யதார்த்தமாகும்.

புதிதாக தேர்தலில் வென்று ஆட்சிபீடம் ஏறும் எந்தவொரு அரசாங்கமும், இந்திய கொள்கை வகுப்பாளர்களின் திட்டங்கள் மற்றும் வரைமுறைகளுக்கமையவே செயற்பட்டு வந்த பழைய அரசின் சுவடுகளையே தொடரவேண்டும் என்ற அவசியம் தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இந்தியாவின் அரசாங்கம் அல்லது அரசு என்ற அமைப்பானது இந்திய தேசியத்தின் மரபுக்கமைய, இந்தியாவின் பொதுவான அரசியல் அபிலாஷைகளுக்கமைய, அதுமட்டுமல்ல இந்தியாவின் அரசியல் யாப்புக்கமைய தமது ஆட்சியைத் தொடரவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

இந்தியாவின் அரசியல் யாப்பிலோ, அல்லது வெளியுறவு சார்ந்த கொள்கைகளிலோ, சமகாலத்தேவை பொறுத்தும், இந்திய அபிலாஷைகள் என்ற இலக்குகளை எட்டவேண்டிய தன் அவசியத்தைப்பொறுத்தும், இந்தியாவின் புவிகள் அரசியல் நலன் குறித்தும் தொலை நோக்குணர்வுடன் மாற்றங்கள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டாலும், இவையாவும் ஆளும் அரசின் தனிப்பட்ட விருப்புக்கேற்ப மேற்கொள்ளப்படுவதில்லை என்பதே முக்கியமானதாகும்.

இலங்கை விவகாரம் தொடர்பான இந்தியாவின் கொள்கைகள் யாவும் ஆரம்பகாலம் முதல் இந்திய அரசியல் தலைமைகள், கொள்கை வகுப்பாளர்கள், புலனாய்வு அமைப்புக்கள் அனைத்தாலும், தவறான மதிப்பீடுகளின் அடிப்படையிலும், கருத்து முரண்பாட்டு நிலைப்பாட்டின் அடிப்படையிலுமே மேற்கொள்ளப்பட்டமையே, இன்றுள்ள குழப்பங்கள், சிக்கல்களுக்கெல்லாம் காரணமாகும்.

கடந்தகால வரலாற்றுத் தவறுகளை மீள விமர்சிப்பது என்பது எமது நோக்கமல்ல... ஆனால் வரலாற்றுத்தவறுகளில் இருந்து பாடங்களைக்கற்காது தொடர்ந்தும் அந்தத் தவறுகளை நியாயப்படுத்த முனைவதும், தொலை நோக்கு சிந்தனையுடன் கொள்கைகளை மாற்றிக் கொள்ள மறுப்பதும் தான் இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களின் தொடர் தவறுகளாக நிகழ்ந்து வருகின்றது என்பதை கவலையுடன் தெரிவிக்கவேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதன் மூலம் இந்தியாவின் புவிகள் அரசியல் மற்றும் இராணுவ நலன்களையும் மட்டுமல்ல, இந்தியாவின் எதிர்கால வளர்ச்சி நிலைக்கு பாதகமான பல்வேறு சக்திகளின் தலையீடுகளையும் இந்து சமுத்திரம் - மற்றும் ஆசியப் பிராந்தியத்தில் தவிர்த்தும், தடுத்தும் கொள்ளக்கூடிய வகையிலான பலத்தை இலங்கைத் தமிழ் மக்களின் தொப்புள்கொடி உறவுடன் இந்தியா பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை இந்தியா இன்னமும், புரிந்து கொள்ளாமல் இருப்பது துயரம் தரும் விடயமே.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான விடயத்தையும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் இந்திய உள்நாட்டு அரசியல் நலன்களுக்காக பயன்படுத்தமுனையும் தவறான போக்கினை இந்திய அரசியல் தலைவர்கள் கைவிடவேண்டிய காலம் நெருங்கிவந்துகொண்டே உள்ளது. அதுபோல இலங்கைப் பேரினவாத அரசியல் தலைமைகளின் பொய்பிரச்சார சதி வலைக்குள் இந்தியா விழாமல் இருக்க எச்சரிக்க வேண்டிய பொறுப்பு ஈழத்தமிழர்களுக்கும் இருக்கவே செய்கிறது.

விடுதலைப்புலிகள் மீதான தடை நீடிப்பு என்ற செய்தி, சிங்கள பேரினவாதிகளுக்கும், அரசுக்கும் மட்டுமே சந்தோசத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் இதனால தொடர்ந்தும் பாதிக்கப்படப் போவது இந்தியாவின் எதிர்காலமும், ஈழத்தமிழர்களும் மட்டுமேயாகும். அதுதானே அவர்களின் விருப்பம்..! இந்தியா தொடர்ந்தும் இதற்கு துணை போகலாமா?

## நாடும் நடப்பும்

கதிர்காமரின் சமாதான எதிர்ப்புக் காவடி



*செய்தி:-* வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் தொடர்பாகவும், சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகவும் கதிர்காமர் வெளியிடும் முரணான கருத்துக்களுக்கு பேரினவாதிகள் பெரும் பாராட்டு

# இந்தியாவின் விசுவாசமான நண்பர்கள் தமிழர்களே தவிர சிங்களவர்கள் அல்ல

## விடுதலை நூல் வெளியீட்டுவிழாவில் இரா. சம்பந்தன்.



(திருகோணமலை)

இந்தியாவின் உறுதிமிக்க விசுவாசம் கொண்ட நண்பர்கள் இலங்கையில் உள்ள தமிழர்களே தவிர சிங்களவர்கள் அல்ல என்பதை இந்தியா தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்' என்று நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' நூல் அறிமுகவிழாவில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் தற்போது ஆட்சியமைத்துள்ள புதிய அரசாங்கம் இதயசுத்தியுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளவேண்டும் இவர்களின் சமாதான நடைமுறைகள குறித்து தற்போது திருப்தி அடையமுடியாத நிலையே உள்ளது.

'சமாதான பேச்சுக்களில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டு, பேச்சுக்கள் நடைபெறாத நிலைமைகள் எதிர்காலத்தில் தோன்றினால், அப்போது தமிழ்த்தேசிய இனமானது தனது தலைவிதியைத் தானே தீர்மானிக்கும் நிலைமை ஏற்படும் அவ்வாறான சூழலில் சர்வதேச சமூகமானது தமிழ் இனத்தின் நிலைப்பாட்டை அங்கீகரிக்க வேண்டும். மேலும், இவ்வாறான அங்கீகாரத்தை சர்வதேச சமூகமானது தமிழ் இனத்திற்கு வழங்கும் என்ற செய்தியை இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச சமூகம் அழுத்தம்திருத்தமாக தெரிவிக்க வேண்டும், இத்தகைய அழுத்தம் ஒன்றை இலங்கை அரசு மீது ஏற்படுத்துவதன் மூலமே பேச்சுவார்த்தை நடைமுறைகளை சரியான வகையில் திசைமுகப்படுத்த முடியும்.

இலங்கைக்கு வருகைதரவுள்ள நோர்வே தரப்பு சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் இதனை தெளிவுபடக்கூறும் அதேவேளை ஜப்பானியத் தூதுவர் யசூஷி அகாஷியிடமும் இதனையே நாம் கூறி உள்ளோம்.

இந்தியா எமது தாய் நாடு - மொழி, கலாசாரம், வாழ்வியல்முறைமைகள் என பல்வேறு விடயங்களில் இந்தியாவின் வழியை பின்பற்றியே நாம் நடக்கின்றோம்.

இந்திரா காந்தியை அவரது மெய்ப்பாதுகாவலரான சீக்கிய இனத்தவரே சுட்டுக் கொன்றார்.

ஆனால் இன்று இந்திராவின் மருமகள் சோனியாவின் ஆசீர்வாதத்துடன் ஒரு சீக்கிய இனத்தவரே பிரதமராகி உள்ளார. இதே போன்று பல ஆண்டுகளுக்கு முன் நடந்து முடிந்த ரஜீவ்காந்தியின் துன்பியல்முடிவு குறித்து எழுந்த கசப்புணர்வும் மாற்றப்படவேண்டியதே, இலங்கைத் தமிழர் மட்டில் இந்தியா தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு நேசக்கரம் நீட்டவேண்டியகாலம் தற்போது அண்மித்துவிட்டதெனவும் தெரிவித்தார். (10)

# 25 ஆயிரம் ரூபா பெற்றவர்களுக்கு ஒரு வருடத்தின் பின் நிவாரணம் நிறுத்தப்படும்

## அரச அதிபர் தெரிவிப்பு

மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபாவைப் பெற்றவர்களுக்கு ஒரு வருட நிவாரண விநியோகத்தின் பின் நிவாரணம் வழங்கப்படமாட்டாது என - யாழ் மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் மத்தியில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது யாழ் மாவட்டத்தில் சொந்த இடத்தில் வசித்தவாறு மீள்குடியவர்வுக் கொடுப்பனவுத் தொகையான 25 ஆயிரம் ரூபாவைப் பெற்றவர்களுக்கு ஒரு வருடத்திற்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படும்.

கடந்த வருடம் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு பெற்ற சொந்தக காணிகளில் வசிப்போரின் நிவாரணம் நிறுத்தப்படும். இதற்கான தீர்மானத்தை அரசாங்கம் எமக்கு அறிவித்துள்ளது.

கடந்த வருடமே இந்த நடைமுறை பின்பற்றப்படவேண்டி இருந்த போதிலும் அரசு தொடர்ந்தும் நிதி வழங்கியதால் நிவாரணம் வழங்கப்பட்டது. தற்போது அந்த நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் நிவாரணம் சிலருக்கு நிறுத்தப்பட வேண்டியுள்ளது.

எனினும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வீடுகளை இழந்தோர், நிரந்தர வீடு இல்லாதோர், உறவினர்களுடன் தங்கியுள்ளோர். முதலானோருக்கு தொடர்ந்தும் நிவாரணம் விநியோகிக்கப்படும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டு ஒரு வருடமாகாத 59 ஆயிரத்து நானூற்று 64 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும் அதேவேளை உயர் பாதுகாப்பு வலயத்தி... னுள் தமது வீடுகளை இழந்துள்ள 17 ஆயிரத்து ஐநூற்று 41 குடும்பங்களுக்கும், சொந்த வீடுகளற்ற மிகவும் வறுமைக் கோட்டிற்குள் வாடும் 41 ஆயிரத்து 23 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# இந்தியாவிலிருந்து வந்த அகதியிடம் கஞ்சா மீட்பு!

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய ஈழத்தமிழ் அகதி ஒருவரிடமிருந்து பெருமளவு கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து கடல் வழியாகத் தலைமன்னார் வந்த ஒருவரே இந்தக் கஞ்சாவை வைத்திருந்தார் எனத் தெரிய வருகிறது. இவருடன் தொடர்புடைய மேலும் இருவர் மன்னார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்கள் மூவரையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, மன்னாருக்கு வள்ளங்கள் மூலம் இந்தியாவிலிருந்து வந்துகொண்டிருந்த சமயம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 25 இலங்கைத்தமிழ் அகதிகளையும் அவரவர் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறும் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார். (201)

நேர்காணல் தீபன்

# தமிழனின் நிலம் மட்டுமல்ல கடற்பரப்பும் பறிபோகிறது...

## ஈழவேந்தன் கூறுகிறார்



இன்றைய நிலையில் இலங்கையில் உள்ள பிணக்கை ஜனாதிபதியோ, பிரதமரோ தீர்க்காத பட்சத்தில், அதனை வே.பிரபாகரன் தீர்க்கும் நிலை இயற்கையாகவே உருவாகும் என நடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தெரிவித்தார்.

நமது ஈழநாட்டிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் நாடாளுமன்றத்துக்குச் சென்று பெரிதாக ஒன்றும் சாதிக்கமுடியாது என்றாலும், எமது கோரிக்கைகளை சர்வதேசத்திற்கு எடுத்து இயம்புவோம், வெளிப்படுத்துவோம், நாடாளுமன்றத்திற்குத் தெரிவாவதற்கு மிகவும் கடுமையாகப் போட்டியிட்டதன் காரணம் - சில புல்லுருவிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திற்குச் சென்று, சுய நலனுடன் வாழ்வதை தவிர்ப்பதற்கும், தமிழர் தரப்பின் பலத்தினை சர்வதேசத்திற்கு உணர்த்துவதற்கும் ஆகும்.

உண்மையில் நான் முதிர்ச்சி பெற்ற தமிழ் மக்களின் தொண்டன். எம்மைவிட முதிர்ச்சி பெற்ற அரசியல் வாதிகள் சிலர் முன்பு நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தனர். அவர்களின் கருத்தை சிங்களத் தலைவர்கள் தட்டிக் கழித்தனர். தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து, நாம் செயற்படுகின்றோம்.

உயிரைக்கூட பணயம் வைத்து, தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்போம். கடந்த சில வாரங்களாக இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் கருத்து தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேசப்போகின்றோம் என்று - ஆனால், ஒருமித்த மனோ உணர்வுடன் அரசிலுள்ள கூட்டுக் கட்சிகளால் சமாதான முன்னெடுப்புச் செயற்பாடுகள எதுவும் முன்னெ[illegible]வில்லை.

ஜனாதிபதி - ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் முட்டி மோதுகின்ற காட்சி தான் இடம்பெற்று வருகின்றது.

சுமார் 125 நாடாளுமன்ற ஆசனம் கிடை[illegible]த்தால்தான் முழுமையான ஆட்சியை அமைக்[illegible]க முடியும் என்பது பொதுவான நிலைப்பாட[illegible]ும்.

முன்னாள் பிரதமர் சமாதானத்தினை [illegible]ன்னொடுத்துச் சென்றபோதிலும், மிகவும் [illegible]ரிதமாக சமாதானத்தினை முன்னெடுத்து [illegible] செல்லத் தவறிவிட்டார். சமாதான முயற்[illegible]சியை முன்னெடுத்து செல்ல முன்னாள் பிரத[illegible]ருக்கு ஜனாதிபதி தடையாக இருந்திருக்கி[illegible]ன்றார்.

ஆணைப் பெண்ணாகவும், பெ[illegible]ண்ணை ஆணாகவும் மாற்றுவதைவிட [illegible]ற்றைய அனைத்து அதிகாரங்களையும் உ[illegible]டையவர் இலங்கையின் ஜனாதிபதி.

இதே மாதிரியான அதிகாரம் [illegible] உடைய பதவி இந்தியாவில்கூட இல்லை. [illegible] இந்த அதிகாரத்தைத் தான் மாற்றவேண்டும் என கின்ற கருத்து அனைவரிடமும் காணப்படுகின்றது.

நாங்கள் என்ன செய்யப்போகின்றோம் என்பதில் உறுதியாக உள்ளோம். சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம், பலரைச் சில காலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது.

இந்த ஏமாற்றுதல்களுக்கு நாங்கள் இனியும் இடமளிக்கப் போவதில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து முற்றாக இராணுவம் வெளியேற வேண்டும் என்ற குரலை - நாம் ஓங்கி ஒலிக்கப் போகின்றோம்.

இராணுவம் பலாத்காரமாக எமது மண்ணில் குடியேறி உள்ளார்கள். பலாத்காரமாக எம்[illegible]மைத் தாக்கிக்கொண்டும் இருக்கின்றார்கள்.

நாங்கள் தேர்தல் காலத்திலும் கூறினோம் 'எங்கள் வீடுகளுக்கு நாங்கள் செல்ல உங்கள் வீடுகளுக்கு நீங்கள் செல்லுங்கள்' என்ற குரலை ஓங்கி ஒலித்தோம்.

70 ஆம் ஆண்டுகளிலேயே நாங்கள் கூறி விட்டோம் - 'தமிழ் மண்ணைக் காப்போம் தாயகம் மீட்போம்' என்று. இந்தக் கருத்து அடங்கிய நூல் - தந்தை செல்வாவின் அணிந்துரையோடு, மூன்று பதிப்பில் பத்தாயிரம் நூல்கள் வெளிவந்தன.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபோது, தமிழ் மக்களுடைய நிலப் பிரதேசம் எண்ணாயிரம் சதுர மைல். இப்போது தமிழ் மக்களுடைய நிலப் பகுதி ஆறாயிரம் சதுர மைல்கள் என அறிகின்றோம்.

இந்தக் கணக்கு இன்னமும் குறைந்து செல்வதற்கே சாத்தியங்கள் உண்டு. கடலோரப் பகுதிகள் கொஞ்சம் கொஞ்சமாகக் கைப்பற்றப்பட்டு வருகின்றன. தமிழனின் நிலம் மட்டுமல்ல, தமிழனின் கடலும் பறி போகின்றது.

எங்கள் கடலில் நாங்கள் மீன் பிடிக்க முடியாதநிலை. உயர் பாதுகாப்பு வலயம் என்ற வரையறை, மறைமுகமாக இந்திய மீனவர்கள் - எங்கள் வளங்களை சுரண்டுகின்ற செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன. இந்தியத் தமிழர்களோடு இலங்கைத் தமிழ் மக்களை மோதவைக்கும் முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

மலை நாட்டுக்கு - 'வெலியோ' என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல தமிழ்ப் பிரதேசங்கள் அபிவிருத்தி என்ற பெயரில் சிங்களப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மொழியுரிமை, தொழிலுரிமை போன்ற அற்பத்தனமான உரிமைகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் தரமுயலலாம். ஆனால், அவை தமிழர்கள் பாரம்பரியமாக தமது சந்ததி வாழும் உரிமையைத் தருமா என்பதில் கேள்வி எழுகின்றது.

தமிழ் ஆட்சிமொழி என்று பெயரளவில் மட்டுமே காணப்படுகின்றது. அது நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. அதைவிட தமிழர்கள் கையில் நடைமுறைப்படுத்தும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

அரச திணைக்களங்கள், அரசா சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறைகள் என்பனவற்றில் இவ்வாறான ஒரு நிலைமை தான் காணப்படுகின்றன.

இஸ்ரேலைத் தமிழர்கள் ஒரு பாடமாகக் கொள்ள வேண்டும். மொழி உரிமை இழந்த பின்பும் தமக்கு ஒரு நாட்டைக் கொண்டிருந்ததனால் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதேபோலத்தான் தமிழர்கள் தமது மண்ணை இழக்காமல் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய முக்கியமான கருத்து

பலஸ்தீன மக்கள் இழந்த நாட்டினை மீட்கப் போராடுகின்றார்கள். ஈழத் தமிழ் மக்கள் இருக்கின்ற நாட்டை இழக்காதிருக்கப் போராடுகின்றார்கள்.

இந்தக் கருத்துக்களை உணர்ந்துதான் நாம் நாடாளுமன்றத்துக்கு பணிபுரியச் செல்கின்றோம். எவ்வளவு காலம் நாம் அந்தப் பதவியில் இருக்கின்றோம் என்பது கேள்விக் குறி. ஆனாலும் எங்களை நம்பி நாடாளுமன்றம் அனுப்பிய மக்களுக்கு, கனவிலும் தீங்கு விளைவிக்கமாட்டோம்.

உயிர்கொடுத்துத்தான் உரிமைபெறவேண்டிய சூழல் இருந்தால், அதனையும் செய்ய சித்தமாயுள்ளோம். ஒரு இனம் எப்போது [illegible] உயிர்களை வழங்கத் தயாராக இருக்கின்றதோ? அப்போது அது உரிமைபெற ஆயத்தமாகிவிட்டது என அவர் தனது நேர்காணலின் போது தெரிவித்தார்.

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## நாடகமும் அரங்கியலும் II — மாதிரி வினாத்தாள்

பகுதி 'அ'விலுள்ள பிரிவு 1, பிரிவு 2 ஆகியவற்றில் தலா இரண்டு வினாக்க[illegible]ளைத் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி 'அ'

◆ பின்வரும் கூற்றுக்கள் சரியா ✗ ( ) பிழையா ✓ ( ) என்பதைக் கு[illegible]றியிட்டுக் காட்டுக.

1. ஸ்பெசல் நாடகங்களின் பிரதான பண்பு ஹிந்துஸ்தானி இசைய[illegible]ாக அமைவதனை நாம் தமிழரங்கில் காணலாம். அல்லது நூர்த்தி நாடகங்கள் ஹிந்துஸ்தானி இசையினைப் பயன்படுத்[illegible]வதில்லை ( )
2. பாத்திர அறிமுகத்தின்போது திரைபிடிக்கும் மரபு தெருக்கூத்[illegible]ில் காணப்படுகிறது.
3. நாட்டுக்கூத்தில் அண்ணாவியார் கூத்தினை பயிற்றுவிப்பவரா[illegible]கவும், நிகழ்த்துவோராகவும், நிகழ்த்துவிப்பவராகவும் தொழிற்படுகின்[illegible]றார் ( )
4. 'சொல்லாடல் அரங்கு' மேலைத்தேய அரங்கச் சிந்தனைக[illegible]ளின் தாக்கமாகும் ( )
5. பார்சி நாடகங்கள் நவீன மேடையினை தமிழரங்குக்கு அ[illegible]றிமுகப்படுத்தின ( )

◆ சரியான விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்[illegible]தைக் கூட்டினுள் எழுதுக

6. குதி உயர்ந்த பாதணி, வேடமுகம், விகாரப்படுத்தப்பட்[illegible] வேட உடை என்பன எந்த அரங்க மரபிற்குரியது?
   (I) கிரேக்க திறஜெடி
   (II) கிரேக்க பழைய மகிழ்நெறி
   (III) சற்றயர் ☐
7. மட்டக்களப்பில் நிறுவப்பட்டது
   (I) சுகிர்த விலாச சபை
   (II) சரஸ்வதி சபை
   (III) லங்கா சுபோத விலாசசபை ☐
8. பகலில் நிகழ்த்தப்படுவது
   (I) பறைமேளக்கூத்து
   (II) வசந்தன் கூத்து
   (III) காமன் கூத்து ☐
9. சூத்திரகர் எழுதியது
   (I) சாகுந்தலம்
   (II) விக்கிரமோர்வசீயம்
   (III) மிருச்சகடிகம் ☐
10. ஒகஸ்தாப்போல் முன்வைத்த அரங்கு
    (I) உருவாக்கல் அரங்கு
    (II) மீள்கண்டுபிடிப்பு அரங்கு
    (III) ஒடுக்கப்பட்டோரின் அரங்கு ☐

◆ பின்வருவனவற்றுள் பொருத்தமற்றதைத் தெ[illegible]ரிவுசெய்து இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக

11. (I) பறைமேளக்கூத்து (II) வசந்தன் கூத்து (III) மகுடிக்கூத்து (VI) அருச்சுனன் தபசு ☐
12. (I) ஹென்றிக் இப்சன் (II) அன்ரன் செக்கோவ் (III) மேயர் கோல்ட் (VI) பேர்னாட்ஷா ☐
13. (I) கலையரசு சொர்ணலிங்கம் (II) பேராசிரியர் கணபதிப்பிள்ளை (III) கவிஞர் முருகையன் (IV) குழந்தை ம.சண்முகலிங்கம் ☐
14. நாட்டிய சாத்திர அரங்கில் காணப்ப[illegible]டுவன (I) பத்து வகை நாடகங்கள் (II) நால்வகை அபிநயங்கள் (III) மூவகை மேடைகள் (VI) ஒன்பது ரசங்கள் (நவரசம்) ☐
15. (I) கடூழியம் (II) உறவுகள் (III) கோடை (VI) புதியதொரு வீடு ☐

◆ குறுவிடை தருக

16. அண்மையில் மேடையேற்றப்பட்ட 'இராவணேசன்' நாடகத்தின் நெறியாளர் யார்?
17. மகத்தான நெறியாளர்களின் அற்புதமான நாடக வடிவங்கள் இரண்டு தருக.

◆ கீறிட்ட இடத்தினை நிரப்புக.

18. நடிகர் ஒன்றியம் .................................. ஸ்தாபிக்கப்பட்டது.
19. அபசுரம் .................................. அவர்களினால் எழுதப்பட்டது.
20. திறஜெடி நாடகமென்பது .................................. ஆகும். இதற்கு அவனது .................................. காரணமாக அமைகிறது.

### எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி 'ஆ'

#### பிரிவு - I உலக அரங்கு

1. கீழ்க்காணும் அம்சங்களை மனதிற்கொண்டு இருவேறு நாடக மரபுகளுக்குரிய இரண்டு திறஜெடி நாடகங்கள் எனும் வகையில் 'ஈடிப்பஸ் மன்னன்' நாடகத்தினையும் 'ஒதெல்லோ' நாடகத்தையும் ஒப்புநோக்கி அவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளை விளக்குக?
   (I) பெருவீழ்ச்சி
   (II) கதைப்பின்னல்
   (III) மோதுகை
   (VI) நிலமைகள்
   (V) ஆக்கத்திறன்
2. இருவேறு யதார்த்தவாத நாடகங்கள் எனும் வகையில் இப்சனுடைய 'பொம்மைவீடு' நாடகத்தையும், 'செர்ரிதோட்டம்' எனும் செக்கோவினுடைய நாடகத்தையும் ஒப்பீட்டு ஆராய்க?
3. பேர்டொல்ற் பிறெக்ற்றின் பின் மேலைத்தேய அரங்கில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களைத் தருக?
4. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக?
   (I) சோபோக்கிளிஸ் (II) அறிஞர் அண்ணாத்துரை
   (III) கட்டியக்காரன் (VI) சிகிச்சையாக அரங்கு
   (V) தொலைக்காட்சி நாடகம் (VI) தேசிய நாடக மரபு
   (VII) சூத்திரதாரன் (VIII) அரங்கின் அழகியல்

#### பிரிவு II இலங்கை அரங்கு

5. கூத்தரங்கின் அம்சங்களை விளக்குக?
6. பேராசிரியர் வித்தியானந்தனின் பணி கூத்தரங்கின் வளர்ச்சிக்கு உதவியதா? என விவாதிக்குக
7. (I) 'நாடகம'வின் பிரதான அம்சங்கள் யாவை?
   (II) நூர்த்தியின் வருகையுடன் 'நாடகம' கீழ்நிலைப்பட்டதற்கான காரணங்களை விவாதிக்குக. அல்லது
   1850 களின் பிற்பாடு தென்னிந்திய தமிழரங்கு இலங்கை தமிழரங்கை பாதிப்பதற்கு ஏதுவான காரணிகளையும் அதனால் பின்பற்றப்பட்ட இலங்கை தமிழரங்கின் பண்புகளையும் அடையாளம் கண்டு விளக்குக.
8. 'வைரமுத்துவின் அரங்கு' பற்றி மதிப்பிடுக.

B. கணேசராஜா B.A. (Hons)
வருகை. விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவு,
யாழ்ப்பாணம்.

# ஆப்கானில் நடைபெற்ற தாக்குதலில் நோர்வே நாட்டவர் ஒருவர் பலி!

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலில் நேற்றுமுன்தினம் இனந்தெரியாதவர்கள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் நோர்வே நாட்டைச் சேர்ந்த அமைதிப் பணிகளில் ஈடுபட்டுவரும் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மற்றொரு நோர்வே நாட்டைச் சேர்ந்த படைச்சிப்பாய் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக நேட்டோ அமைப்பு படைப்பிரிவின் பேச்சாளர் தெரிவிக்கையில் - படையினர் சென்ற வாகனம் குறைந்தது மூன்று ரொக்கட் ஷெல்களினால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

சம்பவம் நடைபெற்ற ஜலலாபாத்தின் பிரதான வீதிக்கு அபாச்சி ஹெலிகொப்ரர்கள் சென்று தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எவரும் உரிமை கோரவில்லை. ஆனாலும், வரும் செப்ரெம்பர் மாதம் ஆப்கானில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை எதிர்த்தும், ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாயின் அரசாங்கத்தை எதிர்த்தும் இஸ்லாமியக் குழுக்களும், தலிபான் அமைப்பும் வன்முறைகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என, ஆப்கான் இராணுவ பெண் பேச்சாளர் மேஜர் நிரா லீபேஜ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதலுடன் இரண்டு வாரத்துக்குள் வெளி



நாட்டவர் மீது மேற்கொள்ளப்படும் இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

கடந்த 11 ஆம் திகதியும் ஜேர்மன் நாட்டு படைப்பிரிவின் சிப்பாய் ஒருவரும் இதே காபூல் பகுதியில் நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலில் காயமடைந்திருந்தார்.

# எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க சவுதி முடிவு!



சவுதி எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து எண்ணெய் விலையைக் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளது. நாளொன்றுக்கு 8 லட்சம் பரல்களை கூடுதலாக உற்பத்தி செய்யவுள்ளது.

இதனால் நாளொன்றுக்கு மொத்த உற்பத்தி 9.1 மில்லியன்களாக உயர்த்தப்படவுள்ளது. நியூயோர்க்கில் ஜி - 7 நாடுகளின் கூட்டத்தில் எண்ணெய் விலையைக் குறைப்பது தொடர்பான முடிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சவுதி அரேபியா எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு லிபியாவின் எண்ணெய் வள அமைச்சர் பெத்திபின் செற்வானி விமர்சித்துள்ளார்.

சவுதி அரேபியா தன்னிச்சையாக தீர்மானம் எதனையும் மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார். உலகில் கூடுதலான எண்ணெய் உற்பத்தியை மேற்கொள்ளும் நாடு சவுதி அரேபியாவாகும்.

ஒபெக் நாடுகளின் எதிர்ப்பின் மத்தியில் சவுதி அரேபியா இத் தீர்மானத்தை மேற்கொண்டமைக்காக ஜி - 7 அமைப்பின் நிதியமைச்சர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

# பெருநாட்டு பொலிஸாருடன் அந்நாட்டு மக்கள் மோதல்!



சென்ற மாதம் பெரு நாட்டில் நகரசபைத் தலைவர் ஒருவர் பகிரங்கமாக மக்களால் கொல்லப்பட்ட நகரில் மீண்டும் பொலிஸாருக்கும்-ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் ஆரம்பித்துள்ளன.

10 பொதுமக்கள் வரை காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ரிரிககா என்ற நகருக்கு செல்வதற்காக அமைக்கப்பட்டிருந்த பாலத்தை மக்கள் போக்குவரத்துக்கு தடைசெய்ய முற்பட்ட வேளையில் மோதல்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

தொடரும் வன்முறைகளினால் அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்துவதற்கு பெருவின் உள்துறை அமைச்சு தீர்மானித்து வருகிறது.

பழங்குடி மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர். இதனால் பலர் காயமடைந்துள்ளதாகவும், கண்ணீர் புகைக் குண்டு பிரயோகத்தினால் மக்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

பெருவின் வடக்குப் பகுதியில் கொக்கோ பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்கள் பாதைகளைத் தடைசெய்து வண்டிகளை எரியூட்டியுள்ளனர்.

கொக்கெயின் எனப்படும் போதைப பொருள் உற்பத்திக்கு கொக்கோவை மூலப்பொருளாகப் பாவிப்பதால், கொக்கோ பயிர்ச்செய்கைக்கு அரசு தடைவிதித்திருந்தமையே ஆர்ப்பாட்டங்களுக்குக் காரணமாக அமைந்ததெனத் தெரிவிக்கப்பட்டது.

## 6 நாட்கள் முற்றுகையின் பின்னர்

# காஸா-ரெல் சுல்தான் பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படை வெளியேறியது!



காஸாவின் ரெல் சுல்தான் பிரதேசத்தில் 6 நாட்கள் முற்றுகையின் பின்னர் அப்பிரதேசத்திலிருந்து இஸ்ரேலியப் படை வெளியேறியுள்ளது. எகிப்திலிருந்து சுரங்கப்பாதை வழியாக ஆயுதங்கள் கடத்தப்படுவதைத தடுப்பதற்காகவே இம்முற்றுகையை மேற்கொண்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

இந்த முற்றுகையின்போது நடத்தப்பட்ட தாக்குதலில் 40 இற்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

மேலும், வானவில் போர் நடவடிக்கை என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்த முற்றுகை இஸ்ரேலியப் படைகளை அவ்விடத்திலிருந்து வெளியேற்றுவதற்கான முன்னேற்பாடென இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் படைகளை காஸா பிரதேசத்திலிருந்து வெளியேற்றுவதற்கு பிரதமர் ஏரியல் ஷரோனினால் முன்வைக்கப்பட்ட சட்டமூலத்தை பிரதான கட்சியான லிகுட் எதிர்ப்புத் தெரிவித்தமையால் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனால் சில மாற்றங்களுடன் மீண்டும் ஒரு சட்டமூலத்தை சட்டசபையில் முன்வைக்கப்படவுள்ளது. இதன்மூலம் காஸா பகுதி, மேற்குக் கரைப் பிரதேசம் ஆகியவற்றிலிருந்து படைகள் பகுதி பகுதியாக வெளியேறுவது என தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே ரெல் சுல்தான் நகரின் நுழைவாசலிலிருந்து ஆறு தாங்கிகள் நேற்று வெளியேறின. இதனால், அங்கு மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடியதாக உள்ளது.

ரபாவில் 17 உடல்கள் இராணுவக் கட்டுப்பாடுகள் காரணமாக அடக்கம் செய்யப்படாமல் உள்ளதாக முஸ்லிம் மதத் தலைவர்கள் தெரிவித்தனர்.

தற்போது இஸ்ரேலியப் படையினர் பிரேசில் முகாம் பகுதியில் நிலைகொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாரிஸ் விமானநிலைய கூரை விபத்து விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளன!



பாரிஸ் விமானநிலையத்தின் கூரை பிரயாணிகளின் நடைபாதையின் மீது விழுந்ததனால் நால்வர் உயிரிழந்தது தொடர்பான விசாரணைகளை கட்டடத் தொழில்நுட்ப வியலாளர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகள் நடத்தப்படும் என, பிரான்ஸின் பிரதமர் ஜீன் பியரி ரபரின் தெரிவித்தார். மேலும் மோப்ப நாய்கள் இடிபாடுகளுக்குள் இறந்த உடல்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இக்கட்டடத்தின் வடிமைப்பாளர் தற்போது சீனாவில் நாடக அரங்கொன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இவர் உடனடியாகப் பாரிஸுக்கு சென்று கூரை நொருங்கி விழுந்ததற்கான காரணத்தை ஆராயவுள்ளதாகத் தெரிவித்தார்.

விசாரணைகளில் வடிமைப்பில் தவறுகள் ஏற்பட்டுள்ளதா என்பது ஆராயப்படவுள்ளது. மேலும், பயங்கரவாத செயற்பாடுகள் எவையும் கூரை நொருங்கி விழுந்ததற்குக் காரணமாக அமையவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.




## அமெரிக்க செய்தி நிறுவனம்

# ஈராக் திருமண நிகழ்வு குறித்த வீடியோ பிரதியை வெளியிட்டது

(பாக்தாத்)

அமெரிக்க செய்தி அமைப்பொன்று வீடியோ நாடாப் பிரதி ஒன்றை ஒளிபரப்பியுள்ளது. ஈராக்கில் திருமண வீடொன்றில் அமெரிக்க விமானப் படையினரின் தாக்குதலில் 40 பேர்வரை கொல்லப்பட்ட சம்பவத்தையே ஒளிபரப்புச் செய்திருந்தது.

இந்த வீடியோ பிரதியில் திருமணம் நடைபெறுவதற்கு முன்ன





ரும், திருமணம் நடைபெற்ற பின்னரும் நடைபெற்ற நிகழ்வுகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

தாக்குதல் நடத்தப்பட்ட இடம், திருமண வீடல்ல எனவும் அந்தப் பிரதேசத்தில் வெளிநாட்டு தீவிரவாதிகள் ஒன்றுகூடியிருந்ததாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அந்தத் திருமண விழாவில் வீடியோ நாடாவை யசர் சவ்காற் அப்துல்லா என்பவர் படம் பிடித்ததாகவும் பின்னர் அவர் கொல்லப்பட்டதாகவும் ஒளிபரப்பிய அமைப்பு தெரிவித்தது.

இதேவேளை திருமணம் ஒன்று நிகழ்ந்ததற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை என அமெரிக்க இராணுவ அதிகாரியான மாக் கிமிற் தெரிவித்திருந்தார்.

அவ்விழாவில் கலந்துகொண்டவர்கள் இளவயதினராகக் காணப்பட்டனர். முதியவர்கள் காணபபடவில்லை. அத்துடன் குழந்தைகள் கொல்லப்பட்டனர் என்பதையும் இராணுவ அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் அதிகளவில் படுக்கைகள் காணப்பட்டன எனவும், இதனால் அது வெளிநாட்டு தீவிரவாதிகள் தங்கியிருந்த இடம் எனவும் அவர் தெரிவித்தார்.

## தாய்வான் ஜனாதிபதியின்

# அண்மைய உரை குறித்து சீனா கடும் கண்டனம்!



(தாய்ப்பேய்)

தாய்வான் ஜனாதிபதி சென் சுய் பியான் கடந்தவாரம் அந்நாட்டு நாடாளுமன்ற ஆரம்ப உரையில் தெரிவித்த கருத்துகளுக்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தாய்வான் ஜனாதிபதி பிராந்திய பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்க முற்படுவதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

தாய்வான் சீனாவின் எல்லைக்குட்பட்டதாகையால், பிரதேச உரிமை, இறைமை ஆகியவற்றை பாதுகாப்பதற்கு போராடவுள்ளதாகவும், சிக்கலான நிலை தோன்றும்போது படைகளை அனுப்பவும், அந்த நாட்டை ஆக்கிரமித்துக்கொள்ளவும் தயாராக உள்ளதாகவும் சீனா தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி சென்னின் உரை ஆக்கபூர்வமானதாகவும், பொறுமைமிக்கதாகவும் அமைந்ததெனவும் அமெரிக்கா குறிப்பிட்டிருந்தது.

தாய்வான் விவகாரங்களைக் கையாளும் பெய்ஜிங்கிலுள்ள சீன அலுவலகம், அண்மைய தாய்வான் ஜனாதிபதியின் உரையானது, தாய்வான் சீனாவின் ஒரு பகுதி என்பதனை ஏற்கமறுப்பதாக உள்ளதென நேற்று விமர்சித்துள்ளது.

அத்துடன், சீனாவுடனான உறவை வலுப்படுத்த தாய்வான் ஜனாதிபதி நேர்மையாகச் செயற்படவில்லையெனவும் சீன நாட்டு பேச்சாளர் சாங் மிங்கிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சீனாவுடனான இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க தாய்வான் சுதந்திரமான நாடாக இயங்குவதை நசுக்குவோம் எனவும் சீனா தெரிவித்துள்ளது.

சீனாவின் இந்த கடுமையான நிலைப்பாடு தொடர்பான கருத்து தொடர்பாக தாய்வானிலிருந்து எவ்வித பதில் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசாங்க சேவையில் பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல்

அரசாங்க சேவையில் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதிமுதல் ஆரம்பமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தகவல் வெளியிட்ட பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் இயம்பலபிட்டிய, பட்டதாரிகளை அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக மாவட்ட மட்டத்திலான நேர்முகப் பரீட்சைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாகவும்,

எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி இந்த நேர்முகத் தேர்வுகள் நிறைவடையும் எனவும் தெரிவித்தார்.

நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டு, அது தொடர்பிலான முடிவுகள் கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் ஒன்றிணைக்கப்படும்.

இதன்மூலம் பட்டதாரிகளுக்கு பொருத்தமான வேலை தொடர்பான தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அமைச்சுக்கள், நிலையியல் சபைகளில் உள்ள வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளன.

இவற்றை அடிப்படையாக வைத்து பட்டதாரிகளுக்கு பொருத்தமான வேலைவாய்ப்பு வழங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதன்மூலம் புதிய அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதி ஒன்றை நிறைவேற்ற விருப்பதாகவும் பிரதி நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு பிராந்திய...

இடம்பெற்றதாக புலிகள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இதையடுத்து மட்டக்களப்பு நிலைமைகள் மோசமடைவதைத் தடுக்கும் நோக்கிலேயே மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவை இராணுவத் தளபதி லயனல் பலகல்ல அவசரமாக நியமித்திருக்கிறார்.

கிழக்கில் வன்முறைகள் அதிகரிப்பதைத் தடுக்கும் நோக்கில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இராணுவ அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்குமிடையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டது.

மேலும் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் பல இடம்பெற்று வந்ததையடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

# தமிழக மீனவர்...

முக்கிய அதிகாரி விவேகானந்தன் தலைமையில் 21 மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய இந்திய மீனவப் பிரதிநிதிகள், இலங்கை வந்த தாம் உண்மை நிலையை உணர்வதாகவும், இலங்கை மீனவர்களின் பிரச்சினையை தீர்க்க ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன், இருபகுதி மீனவர்களும் இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என கலந்தாலோசனை நடந்தும் வகையிலும் தாம் இலங்கை வந்ததாக இந்திய மீனவ சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நாளைமறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ள சந்திப்பில் இறுதிமுடிவை எடுக்கலாமெனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(201)

# இரு தமிழ் இளைஞர்கள்...

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் காலி கடற்படைத் தளத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இரண்டு தமிழ் இளைஞர்களை கடற்படையினர் பிடித்துச்சென்று விசாரணை செய்தனர்.

இதன்போது, இந்த இளைஞர்களிடம் எந்த அடையாள அட்டையும் இருக்கவில்லையெனவும், அப்பகுதியில் நடமாடியதற்கான உரிய காரணத்தைக் கூறமுடியவில்லையெனவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாழைச்சேனையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை செல்லத்தம்பி (வயது 16), ராசே செல்லத்தம்பி (வயது 14) ஆகிய இந்த இரு இளைஞர்களையும் கடற்படையினர் மேலதிக விசாரணைக்காக காலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

காலி துறைமுகப் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# பொருளியற்துறை....

பின்னரே மீளத் திரும்பியிருந்தார்.

இவரது படுகொலை குறித்து கிழக்குப் பல்கலைக்கழக சமூகமும், மட்டக்களப்பு மக்களும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்ட தம்பையாவின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## உயர்பாதுகாப்பு வலய நெருக்கடி

# கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுடன்; மனிதநேய அமைப்பு பிரதிநிதிகள் சந்திப்பு!

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அனித்தா ஸ்ரான்பேக்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தசந்திப்பில், யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன், செயலாளர் எம்.தர்மரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச்சந்திப்பின்போது - வலி.வடக்கில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வலிவடக்கில் 60 சதவீதமான மக்கள் விவசாயத்தையும், 30 வீதமான மக்கள் கடற்தொழிலையும் தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இந்தப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் இருந்து கண்ணிவெடிகள் இதுவரையில் அகற்றப்படவில்லை. மேலும் இந்தப் பகுதியில் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட மீனவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்றும், அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து 600 மீற்றருக்குள் பொதுமக்கள் மீளக்குடியமரமுடியாது என்கின்ற படையினரின் கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி பொதுக்கட்டடங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும். ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் பல பொதுக்கட்டடங்கள் மற்றும் பொதுமக்களது வீடுகளில் இருந்து படையினர் வெளியேறவில்லை.

குறிப்பாக யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் உள்ள சாமி கட்டடத் தொகுதியில் தற்பொழுதும் படையினர் நிலைகொண்டுள்ளனர். மேலும், இந்த வீதி மூடப்பட்டுள்ளதால், நகரப் பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இவை குடாநாட்டில் இதுவரையில் இயல்புநிலை ஏற்படுத்தப்படவில்லை என்பதனை வெளிப்படுத்துவதாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களை உடன் அமுல்படுத்தி குடாநாட்டில் இயல்புநிலை ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப் புக்குழுவினரிடம் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மனிதநேய அமைப்புக்களின் மகஜரை ஏற்றுக்கொண்ட இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அனித்தா ஸ்ரான்பேக் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக உரிய தரப்புக்களுடன் கலந்தாலோசித்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு குறித்து ஆராய்வதாக உறுதியளித்துள்ளார்.

## போராளி வீரச்சாவு

கடந்த 20.05.2004 அன்று மட்டக்களப்பு ஆனைவிழுந்தான் பகுதியில் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்குள்ளான போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

2 ஆம் லெப்டினன்ட் ரோகிதன் என்று அழைக்கப்படும் முனைக்காடு எட்டாம் வட்டாரம் கொக்கட்டிச்சோலை மட்டக்களப்பைச் சேர்ந்த பரமானந்தம் சுந்தரலிங்கம் என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஜே.வி.பி.எம்.பி பதவி விலகினார்

ஜே.வி.பியின் சார்பில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிவகித்த பிலிப்குமாரலியனகே நேற்று தமது பதவியை ராஜினாமா செய்தார்.

ஜே.வி.பியைச் சேர்ந்த இவர் வேறொரு உறுப்பினருக்கு இடம் விட்டுக்கொடுக்கும் வகையிலேயே தமது நாடாளுமன்ற பதவியை ராஜினாமா செய்திருப்பதாக ஜே.வி.பி விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்பு

ஊடகத்துறை பிரதி அமைச்சர் எம்.ஏச்.சேகு இசதீன் இன்று யாழ்ப்பாணம் வருவதற்கு அவருடனான சந்திப்பில் கலந்துகொள்வதை புறக்கணிக்குமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து நேற்றிரவு அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் மக்கள் பல்வேறுபட்ட கஷ்டங்களை எதிர்நோக்கிவருகின்றபோதிலும் இதுவரை இயல்புவாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை என குற்றம் சாட்டியதுடன் இவரது விஜயம் ஒரு கண்துடைப்பு எனவும் தெரிவித்துள்ளது.

# உலக வங்கி குழுவை சந்திக்க அரச அதிபர் திருமலைக்கு!

(கொழும்பு)

இன்று இலங்கை வரவுள்ள உலக வங்கிக் குழுவினருடன் பேச்சுக்களை நடத்துவதற்காக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் திருகோணமலைக்கு செல்லவுள்ளார்.

இன்று மாலை திருகோணமலை மாவட்ட சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள மாவட்ட அரச அதிபர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பில் ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளரான ஹரீம் பீரிஸ் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சந்திப்பினைத் தொடர்ந்து நாளைகாலை ஹரீம் பீரிஸ் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, இன்று ஊடகப் பிரதி அமைச்சர் சேகு இசதீன் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றமை குறிப்பிடத்தககதாகும். இவர் யாழ். செயலகத்தில் வைத்து ஊடவியலாளர்களைச் சந்தித்து உரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கட்டடத் தொழிலாளர் மீது பொலிஸ் தாக்குதல்

## புத்தளம் நகரில் வன்முறைகள்

புத்தளத்தில் கட்டட வேலை செய்துகொண்டிருந்த இருவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதையடுத்து, அங்கு நேற்று வன்முறைகள் இடம்பெற்றன.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கற்பிட்டி நகரில் உள்ள கட்டடத்தில் மேசன் தொழில் புரிந்த இருவரே பொலிஸாரால் தாக்கப்பட்டனர். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக, கற்பிட்டியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. வீதித்தடைகள் போடப்பட்டு ஆர்பாட்டங்களும், ரயர் எரிப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

இதனால் புத்தளம் நகரில் இடம்பெற்ற பதற்றத்தை தணிக்கும் முகமாக புத்தளப் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசேட கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கட்டடத் தொழிலாளிகளை தாக்கிய பொலிஸ மீது உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பிரதேசத்தின் நிலைமை சீரடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.







நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்

நிலா பதிப்பகம்

சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION) சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.

- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGITAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE

பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.